# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**அக்டோபர் 2010 ஜீவியம் 16 மலர் 6**

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்


இம்மாதச் செய்தி ............ 2

உலகத்தின் ஆன்மீக வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ............ 3

லைப் டிவைன் - கருத்து ............ 15

அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ............ 19

தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ............ 30

சாவித்ரி ............ 31

யோக வாழ்க்கை விளக்கம் VI ............ 33

அன்பர் கடிதம் ............ 45

லைப் டிவைன் ............ 46

பூரணயோகம் - முதல் வாயில்கள் ............ 54

அன்னை வாழ்வு ............ 56

அஜெண்டா ............ 62


❀ ❀ ❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-


## ஜீவியத்தின் ஓசை

**அதிகாரம் வளரும்பொழுது மனிதன் தன் குற்றம், குறைகளை உலகம் போற்றிப் பாராட்ட வேண்டுமென விரும்புவான்.**

**எழுந்ததை அன்னைக்குச் சொல்வது சமர்ப்பணம். எழுவதைத் தவிர்ப்பது சரணாகதி.**

**அன்னை மீதுள்ள நம்பிக்கை எதையும் பொறுத்ததில்லை.**

**தானே நடக்கும் அதிசயத்தை ஒருவரால் நடத்த முடியும் பொழுது அவர் பிரம்மா ஆகிறார்.**

இம்மாதச் செய்தி

**திரண்ட செல்வம்**

**திட்பமாக உண்டு.**



# உலகத்தின் ஆன்மீக வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்

N. அசோகன்

1. ஆதிகாலத்து மனிதர்கள் இயற்கையிலுள்ள ஒரு ஒழுங்கையும், ரெகுலாரிட்டியையும் கண்டு இதற்குக் காரணமான இயற்கைக்குப் பின்னால் இயற்கையின் அதிபதியாக ஒரு சக்தி இருக்க வேண்டுமென்று நம்பினார்கள். அச்சக்திக்கு இறைவன் என்று பெயரிட்டார்கள். சில சமூகத்தினர் கடவுள் ஒருவர்தான் என்று நம்பினார்கள். மற்றும் சில சமூகத்தினர் இயற்கையின் பல்வேறு அம்சங்களான காற்று, மலை, கடல், நெருப்பு, ஆகாயம், சூரியன், சந்திரன் என்று எல்லாவற்றிற்கும் தனித்தனி கடவுள்கள் இருப்பதாக நம்பினார்கள்.

2. ஆதிவாசிகள் மனித உருவில்தான் கடவுள் இருப்பார் என்று நம்பினார்கள். ஏனெனில் அவர்களால் ஆண்டவன் உருவமில்லாமல் இருப்பார் என்று நினைக்க முடியவில்லை. இந்துக்கள் வழிபட்ட இந்திரன், வாயு, வருணன் போன்ற புராண காலத்து தேவர்களையும் கிரேக்க நாட்டு மக்கள் வழிபட்ட கிரேக்கக் கடவுள்களையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மேலும் ஆதிமனிதர்கள் கடவுள்களுக்கு மலர்களும், பழங்களும் வைத்து மேலும் மிருகங்களையும் பலியிட்டு வேண்டுதல் செய்து பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நம்பினார்கள்.

3. இஸ்ரேலில் வாழ்ந்த பழங்காலத்து யூதர்கள் கடவுள் ஒரேயொருவர்தான் என்று நம்பினார்கள். அவர்களுடைய கடவுள் மேலும் தனக்குச் சிலை வழிபாடு கூடாது என்றும் கூறினாராம். யூதர்களின் கண்களில் கடவுள் அன்பின் வடிவமானவராகத் தெரியாமல் நீதி வழங்கும் நீதிபதியாகத்தான் தெரிந்தார்.

4. யூதர்களின் தலைவரான மோஸஸ் என்பவர் யூத மக்களுக்கும்,

அவர்களுடைய கடவுளுக்கும் இடையே ஒப்பந்தம் செய்து கொள்வதாகவும் அதன் அடிப்படையில் யூத கடவுள் யூத மக்களுக்குப் பத்து கட்டளைகள் பிறப்பித்துள்ளதாகவும் அறிவிப்புச் செய்கிறார்.

5. ஏசுநாதர் இறைவனைக் கடுமையான நீதிபதியாகப் பார்ப்பதைத் தவிர்த்து அன்புள்ளம் கொண்டவராகப் பார்க்க வேண்டும் என்கிறார். மேலும் அன்பையும், கருணையையும் வெளிப்படுத்தி நாம் வாழ்ந்தால் மேலுலகத்தில் உள்ள சொர்க்கத்தைப் பூவுலகுக்குக் கொண்டு வரலாம் என்றும் பேசுகிறார். ஆனால் ரோமானிய அதிகாரிகள் அவரைத் தவறாகப் புரிந்து கொண்டு அவர்களுடைய அரசாட்சிக்கு இவரால் ஆபத்து வரும் என்று நினைத்து இவரைச் சிலுவையில் அறைகிறார்கள். ஏசுநாதரைப் பின்பற்றும் கிருஸ்துவர்கள் இறைவனைத் தந்தையாகவும், ஏசுநாதரை மகனாகவும் உலகத்தை உய்விப்பதற்காகத் தகப்பனார் மகனைக் கீழே அனுப்பியதாக நம்புகிறார்கள்.

6. முகமது நபி அவர்கள் ஆண்டவனின் சன்னிதானத்தில் எல்லோரும் சமம் என்ற புதிய கொள்கையை அறிவித்து அரேபிய மக்களைத் தன்னுடைய இஸ்லாம் என்ற புதிய மதத்தை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்கிறார்.

7. சீன அறிஞர்கள் பாஸிட்டிவாகவும் மற்றும் நெகட்டிவாகவும் செயல்படுகின்ற இன்-யங் (yin-yang) என்ற இரண்டு நியதிகளைக் கண்டுபிடித்து அவை முரண்பாடாக தெரிந்தாலும் உண்மையில் உடன்பாடாகச் செயல்படுவதாக அறிவிக்கின்றார்கள். இவற்றினுடைய பரஸ்பர செயல்பாட்டின் விளைவாகத் தான் படைப்பே நிகழ்வதாகவும் சொல்கிறார்கள்.

8. கன்பூஷியஸ் என்ற சீன அறிஞர் சமூகம் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியதிகளைப் பற்றிய ஒரு திட்டம் வகுத்தார். இரண்டாயிரம் ஆண்டு காலமாக சீன மக்கள் அவர் வகுத்துக் கொடுத்த திட்டத்தைத்தான் கடைப்பிடிக்கிறார்கள்.

9. உபநிடதங்களை உருவாக்கிய வேத காலத்து ரிஷிகள் படைப்பிற்குப் பின்னால் இருக்கும் இறைவனைக் கண்டறிந்து அவரைப் பிரம்மம் என்று அழைத்தார்கள். மேலும் படைப்பில் உள்ள எல்லாமே இந்தப் பிரம்மத்தினுடைய பல்வேறு சொரூபங்கள்தான் என்றும் அவர்கள் அறிவித்தார்கள். மேலும் இந்தப் பிரம்மம் சத், சித், ஆனந்தம் என்ற மூன்றாலும் நிரப்பப்பட்ட சச்சிதானந்தமாகச் செயல்படுவதாகவும், படைப்பே இறைவன் தன்னுடைய ஆனந்தத்திற்காக நிகழ்த்துகின்ற விளையாட்டு என்றும் அறிவித்தார்கள்.

10. புத்தரும், மகாவீரரும் ஆசையை அழித்து அதன் மூலம் நிர்வாணத்தை அடைந்து கர்மம் மற்றும் மறுபிறவியிலிருந்து விடுதலை பெறலாம் என்று அறிவித்தார்கள். நிர்வாணத்தை அடைய அவர்கள் கண்டுபிடித்த வழி நல்ல சிந்தனை, நல்ல பேச்சு, நல்ல நடத்தை மற்றும் அஹிம்சை போன்ற எட்டு அம்சங்கள் கொண்ட எட்டு வழி பாதையாகும். புராணக் கடவுள்களையும், மற்றும் வேதத்தின் அதிகாரத்தையும் இவர்கள் இருவரும் நிராகரித்தார்கள். புத்தர் மேலும் ஒரு படி சென்று ஆன்மாவே இல்லை என்று சொல்லி கர்மம், மற்றும் மறுபிறப்பு என்று இவையிரண்டும்தான் நிரந்தரமானவை என்று அறிவித்தார்.

11. பிரம்மம் ஒன்றுதான் உள்ளது. உலகமென்பது மாயை என்று ஆதிசங்கரர் அவர்கள் தன்னுடைய அத்வைத கொள்கைகளை வெளியிட்டார். அவரைப் பொறுத்தவரை பரமாத்மாவும், ஜீவாத்மாவும் ஒன்றே என்று கருதினார்.

12. மத்துவாச்சாரியார் சங்கரரிடமிருந்து வேறுபட்டு ஜீவாத்மா, பரமாத்மாவிடம் இருந்து வேறானது என்று கருத்துத் தெரிவித்தார். மேலும் உலகம் வேறு, ஆண்டவன் வேறு என்றும் அவர் வாதிட்டார்.

13. இராமானுஜாச்சாரியார், சங்கரர் மற்றும் மத்துவர் என்றிவர்களுக்கிடையே நடுநிலையான கொள்கையை வெளியிட்டார். அதாவது அடிப்படையில் பிரம்மம் ஒன்றுதானுள்ளது என்றாலும், ஜீவாத்மா எட்ட இருந்து பிரம்மத்தை வழிபடும் அளவிற்கு வேறுபட்டுள்ளது என்று வாதிட்டார்.

14. கிருஷ்ணாவதாரத்தின் காரணமாக பக்தி வழிபாடு நாட்டில் பெருகி, பக்தி மார்க்கம் மக்களைப் பெரிதும் கவர்ந்தது. மேலும் அவருடைய அவதாரத்தின் பலனாக மேல்மனமென்று பகவான் குறிப்பிடுகின்ற ஓர் உயர்ந்த மனநிலை பூமியில் இறங்கியது. இவருடைய அவதாரத்திற்கு முன்னர் இராமாவதாரத்தின் பலனாக உயர்மனம் என்று குறிப்பிடப்படுகின்ற ஒரு மனநிலை பூமியில் இறங்கி இருந்தது. உயர்மனம் தர்மத்தை நிலை-நாட்டுகின்ற மனம், இராமபிரானும், மகாபாரதத்தில் வருகின்ற தருமபுத்திரரும் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளனர். மேலும் ஸ்ரீ அரவிந்தரின் கருத்துப்படி கிருஷ்ணாவதாரத்தின் பலனாகத்தான் மனிதனிடத்தில் சைத்தியப் புருஷன் உருவாகி உள்ளது என்று தெரிகிறது.

15. கிருஷ்ண பகவான் தன்னுடைய கீதையில் அவரவர்களும் தனக்குண்டான வேலைகளைப் பலனை எதிர்பார்க்காமல் செய்ய வேண்டுமென்று சொல்கிறார். இப்படி வேலை செய்யும் பொழுது அவரவருடைய செயல்பாடுகள் பரிசுத்தமாகின்றன என்றும் சொல்கிறார்.

16. பல்வேறு யோக மார்க்கங்கள் உதயமாகின்றன. ஞானயோகம் அறிவைப் பரிசுத்தம் செய்து மோட்சம் தேடுகிறது. கர்மயோகம் பரிசுத்தமான முறையில் வேலை செய்து அதே மோட்சத்தை நாடுகிறது. பக்தியோகத்தில் பக்தர் தன்னுடைய இஷ்ட தெய்வத்துடன் தன்னுடைய ஆன்மாவை இணைத்து அதன் மூலம் மோட்சத்தைத் தேடுகிறார். தந்திரயோகம் சக்கரங்-களைத் தட்டி எழுப்பி அவற்றின் மூலம் மோட்சத்தை நாடுகிறது.

17. சைவ நாயன்மார்களும், வைஷ்ணவ ஆழ்வார்களும் சிவபெருமான் மற்றும் திருமாலைக் குறித்து பக்திப் பாடல்களைப் பாடி பக்தி வழிபாட்டின் உச்சத்திற்கே சென்றனர். குறிப்பாக ஆண்டாளுடைய பக்திப் பாடல்கள் இறைவனை நாயகனாகவும், பக்தனை நாயகியாகவும் உருவகம் செய்வதாக அமைந்துள்ளது. பகவான் ஸ்ரீ அரவிந்தர் நம்மாழ்வாரின் பாசுரங்களில் ஒரு ஆன்மீக ஸ்பரிசத்தையே உணர்கிறார்.



18. ஐரோப்பாவில் கத்தோலிக்க மதத்தின் ஒற்றுமையை உடைக்கும் வகையில் மடம் மற்றும் பாதிரியார்களின் அதிகாரத்தை எதிர்த்து பக்தன் நேரடியாக இறைவனுடன் தொடர்பு கொள்ளலாம் என்று மார்ட்டின் லூதர் புதிய பாதையை வகுத்தார். இந்த எதிர்ப்பின் விளைவாக ஐரோப்பிய கண்டத்தில் பாதி தேசங்கள் கத்தோலிக்க மதத்தின் வட்டத்திலிருந்து விலகிச் சென்றன.

19. குருநானக் அவர்கள் இஸ்லாமிய படையெடுப்பை எதிர்க்கும் வகையில் சீக்கிய அமைப்பு ஒன்றை தொடங்கினார். இந்து மதத்தின் முன்னணி தற்காப்புப் படையாகச் செயல்பட்ட அந்த அமைப்பு பின்னர் நாளடைவில் தனி ஒரு மதமாகவே தலை எடுத்தது.

20. மார்ட்டின் லூதர் ஆரம்பித்து வைத்த பிராட்டஸ்டண்ட் மதம் பல்வேறு உட்பிரிவுகளை வளர்த்துக் கொண்டு கிறிஸ்துவ மதத்தின் ஒற்றுமையை மேலும் சீர்குலைத்தது. பிராட்டஸ்டண்ட் பிரிவினருடைய உள்ளிருக்கும் இறை சாந்நியத்தின் மேல் இருக்கும் நம்பிக்கை அவர்களுடைய ஆன்மீக பலமாக விளங்கியது. அதே சமயத்தில் கத்தோலிக்க பிரிவினருடைய மேரி மாதாவின் மேலுள்ள நம்பிக்கை மற்றும் கத்தோலிக்க மதத்தினுடைய சூட்சும ஆன்மீக ஞானம் என்ற இரண்டும் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்தன.

21. இத்தாலியில் ஐரோப்பிய மறுமலர்ச்சி ஓவியம் மற்றும் சிற்பக் கலை புது முன்னேற்றங்களுடன் தொடங்கியது. இந்த மறுமலர்ச்சி டாவின்சி மற்றும் மைக்கேல் ஏஞ்சலோ போன்ற மேதைகளை உருவாக்கியது. இந்த மறுமலர்ச்சி ஓவியம் மற்றும் சிற்பக் கலையைத் தவிர இசை, இலக்கியம், டெக்னாலஜி மற்றும் புதிய இடங்களைக் கண்டுபிடித்தல் என்று பல துறைகளில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு 20ஆம் நூற்றாண்டு வரை தீவிரமாக இருந்தது. இந்த மறுமலர்ச்சிக்குப் பின்னால் ஒரு ஆன்மீக உள்ளெழுச்சிகூட காரணமாக இருக்கலாம்.

22. சுதந்தரம், தனித்தன்மை முன்னேற்றம் ஆகியவற்றைக் கொண்டு வர விரும்புகின்ற பரிணாம சக்திகள் அதற்குத் தகுந்த இடமாக அமெரிக்காவைத் தேர்ந்தெடுத்து தனித் தன்மை வளர விடாமல் தடுக்கக்கூடிய சமூக கட்டுப்பாடு-களிலிருந்து மனிதர்களை விடுவித்து பூரண தனித்தன்மையை வெளிக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

23. ஐரோப்பாவில் பிரெஞ்சு புரட்சி வெடித்து அரசர்களும், பிரபுக்களும், கத்தோலிக்க மடமும் செய்த கொடுமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் முடியாட்சி, பிரபுக்கள் ஆட்சி மற்றும் மடங்களின் ஆதிக்கத்தை வீழ்த்தியது.

24. இங்கிலாந்தில் தொழிற்புரட்சி வெற்றிகரமாக நடந்து தொழில் உற்பத்தியைப் பல மடங்கு பெருக்கக்கூடிய எந்திர சக்தியை மனிதனுக்கு அளித்தது. நாள் முழுவதும் உயிர் வாழ்வதற்கு வேண்டிய வருமானத்தைத் தேடுகின்ற வேலையிலேயே நேரம் செலவாவதைத் தவிர்த்து அவனுக்குப் போதுமான ஓய்வைக் கொடுத்து அவனுடைய படிப்பு, முன்னேற்றம், கலாச்சார ஈடுபாடுகள் ஆகியவற்றையும் கவனிக்கும் வாய்ப்புகளைத் தொழிற்புரட்சி அவனுக்கு அளித்தது.

25. பிரஞ்சு புரட்சி எல்லை மீறிச் சென்று ஐரோப்பாவில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்த பொழுது நெப்போலியன் வந்து ஐரோப்பாவில் மீண்டும் ஒழுங்கு முறையை நிலைநாட்டினான். ஸ்ரீ அரவிந்தருடைய கண்ணோட்டத்தில் நெப்போலியன் ஆண்டவனால் ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்ட ஒரு மாவீரன் ஆவான். ஐரோப்பாவில் பழைய அரச குடும்பங்களின் பிடியிலிருந்து ஐரோப்பியர்களை விடுவித்து சுதந்தரம் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளை மக்கள் உணரும்படிச் செய்ததே அவருடைய வேலை. இந்த வேலையை அவர் சிறப்பாகச் செய்தார். இருந்தாலும் இறுதியில் எந்த முடியாட்சியை அழிக்க வந்தாரோ அதனுடைய சௌகரியங்களால் தானும் ஈர்க்கப்பட்டு தன்னிலை இழந்தார்.

26. கார்ல் மார்க்ஸ் தன்னுடைய கம்யூனிஸ்ட் Manifesto என்ற



புத்தகத்தை வெளியிட்டு ஒரு நாட்டின் செல்வ வளத்தில் உழைக்கும் வர்க்கத்தினருக்கும் சம உரிமையுண்டு என்று வாதிட்டு அதன் வழியே எல்லா மனிதர்களும் ஆன்மீக நிலையில் சமம்தான் என்ற ஆன்மீக உண்மையைச் சமூக ரீதியாக நிரூபித்தார். அவருடைய கம்யூனிச சமூக அமைப்பு என்பது, சமூகம் முழுமையானது என்பதால் சமூகத்தினுடைய பலன்களும் எல்லோருக்கும் போய்ச் சேர வேண்டும் என்ற ஆன்மீக உண்மைக்குப் பொருளாதார வடிவம் கொடுத்தது போல் அமைந்துள்ளது. அவருடைய கம்யூனிச கொள்கை நாத்திக மயமாக இருந்தாலும் அடிப்படையில் ஒரு ஆன்மீக உண்மையைச் சார்ந்துள்ளது.

27. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்கள் உயர்ந்த ஆன்மீக உண்மைகளை எளிய கதைகள் மூலமாக மக்களுக்கு விளக்கி ஒரு பெரிய மகானாக வாழ்ந்து காட்டினார். எல்லா மதங்களும் ஒன்று தான், ஆண்டவன் ஒருவர்தான் என்ற ஆன்மீக உண்மையை விளக்க தண்ணீரை நாம் பல மொழிகளில் பல பெயரிட்டு அழைத்தாலும், இறுதியில் தண்ணீர் ஒன்றுதான் என்ற உவமையைக் கையாண்டார். பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவரை ஒரு பெரிய சித்தி அடைந்த மகானாகவும் வர்ணித்துள்ளார்.

28. சுவாமி விவேகானந்தர் அவர்கள் மேலை நாடுகளுக்குச் சென்று தன்னுடைய சொற்பொழிவுகளின் மூலம் வேதங்கள் மற்றும் உபநிடதங்களில் வெளிப்பட்டுள்ள இந்திய ஆன்மீகத்தின் உயர்வை விளக்கிச் சொன்னார். இப்படிச் செய்ததன் மூலம் இந்து மதத்தில் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டு வந்தார்.

29. இராஜாராம் மோகன்ராய் என்பவரும் மற்றும் தேவேந்திரநாத் தாகூர் அவர்களும் பிரம்ம சமாஜத்தை நிறுவி சிலை வழிபாடு, பல கடவுள் வழிபாடு, மற்றும் ஜாதிப் பிரிவினைகள் ஆகியவற்றை இந்து கலாச்சாரத்தில் இருந்து எடுக்க முயன்றார்கள். இந்த பிரம்ம சமாஜம் வங்காளத்தில் ஒரு காலக் கட்டத்திற்குத் தழைத்து வளர்ந்தது. பின்னர் அதற்குள் பிரிவினைகள் ஏற்பட்டு இறுதியாக ஆதிதர்மம் என்ற பெயர்

கொண்டு செயல்பட்டு வருகிறது. உருவம் இல்லாத பரபிரம்மத்தை வழிபடுவதுதான் ஆதி தர்மத்தினுடைய முக்கிய கொள்கையாக இருக்கிறது.

30. ஆத்ம விசாரம் என்ற புதிய அணுகுமுறையைக் கொண்டு வந்து ரமண மகரிஷி அவர்கள் இந்திய ஆன்மீகத்தை மேலும் வளப்படுத்தினார். ஆத்ம விசாரத்தில், தான் உடம்பு இல்லை, உணர்வு இல்லை, அறிவும் இல்லை என்று ஒவ்வொன்றாக விலக்கி வைத்து இறுதியாகத் தான் ஒரு ஆத்மா என்று கண்டுபிடிக்கலாம் என்று அவர் வழிவகுத்துக் கொடுத்தார்.

31. இருண்ட சக்திகள் ஐரோப்பாவில் கிளர்ந்து எழுந்து இரண்டு உலகப் போர்களை வரவழைத்து ஏராளமான பொருட் சேதத்தையும், உயிர்ச் சேதத்தையும் உண்டாக்கின. இப்படி இருண்ட சக்திகள் வழங்கிய எதிர்ப்பை அன்னையினுடைய ஆன்மீக முயற்சிகளுக்கு வழங்கிய எதிர்ப்பாக பகவான் எடுத்துக் கொண்டார். இந்த இரண்டு உலகப் போர்களில் விளைந்த உயிர் மற்றும் பொருட்சேதத்தை நாம் வேறு வகையாகவும் பார்க்கலாம். அதாவது பிஸிக்கல் ஜீவியத்-தினுடைய வளைந்து கொடுக்காத தன்மையை உடைக்கும் பொருட்டு பரிணாம சக்திகள் இத்தகைய நஷ்டத்தை ஏற்படுத்தியதாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

32. அன்னை ஹிட்லரை சோவியத் யூனியன் மேல் படையெடுக்க வைத்து அதன் விளைவாக ஸ்டாலினுடன் மோத வைத்தார். அன்னையின் கண்ணோட்டத்தில் ஹிட்லர் ஒரு அசுர சக்திக்குக் கருவியாகப் பயன்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் ஸ்டாலினோ உண்மையிலேயே ஒரு அசுரனுடைய மானுடப் பிறவியாக இருந்தார். அன்னை இரண்டு அசுரர்களை ஒருவருடன் ஒருவர் மோதவிட்டு ஒரு ஆன்மீக தந்திரத்தின் வழியாக இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

33. இரண்டாம் உலகப் போரின் முடிவைப் பின்தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் வைத்திருந்த காலனிகள் எல்லாம் விடுதலை பெற்றன. இந்திய நாடுதான் முதலில் இம்மாதிரி விடுதலை அடைந்து இந்தக் காலனிகளின் விடுதலை படலத்தைத் தொடங்கி வைத்தது.

34. மகாத்மா காந்திஜி அவர்கள் சத்தியாகிரக அணுகு முறையைப் பின்பற்றி வன்முறை இல்லாமல் இந்தியாவிற்குச் சுதந்தரம் வாங்கி தந்து அஹிம்சையின் தலைவர் என்று பெயரெடுத்தார்.

35. இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட சேதத்திலிருந்து ஐரோப்பாவும், ஜப்பானும் அமெரிக்காவினுடைய நிதியுதவியைக் கொண்டு மீண்டு வந்தன. அடுத்த 50 வருடங்களில் இந்நாடுகள் நிகழ்த்திய பொருளாதார முன்னேற்றம் உலகம் அதற்கு முன்னால் 500 வருடங்களில் நிகழ்த்திய முன்னேற்றத்திற்குச் சமம் என்று UNDP என்ற சர்வதேச ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. பிஸிக்கல் லெவலிலிருந்து விடுபட்டு உணர்வு மற்றும் அறிவு நிலைக்கு மக்கள் உயர்ந்ததால் இந்த முன்னேற்றம் நிகழ்ந்துள்ளதாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

36. ஸ்ரீ அரவிந்தர் தீவிர அரசியலில் இருந்து விலகி அமைதியாக யோகம் செய்யும் பொருட்டு புதுவைக்கு வந்தார். சத்திய ஜீவியம் என்ற உண்மையை பூமிக்கு இறக்கிக் கொண்டு வந்து அதன் உதவியைக் கொண்டு உலகை தெய்வீக மயமாக்குவதே தன்னுடைய நோக்கம் என்று அவர் அறிவித்தார். மனிதன் தன்னுடைய பர்சனாலிட்டியின் எல்லா அம்சங்களையும் பரிசுத்தம் செய்து இறைவனுக்குச் சரணாகதி செய்து அதன் பலனாகத் தன்னுடைய ஆன்மாவை வெளிக் கொணர்ந்து, வெளிவந்த ஆன்மா சத்தியஜீவிய சக்தியை பெற்று சத்திய ஜீவிய மனிதனாக உருவெடுப்பதுதான் தன்னுடைய பூரண யோகம் என்று அறிவித்தார்.

37. அன்னை அவர்கள் புதுச்சேரியில் பகவானைச் சந்தித்து அவருடன் சேர்ந்து திருவுருமாற்றத்திற்கான யோகத்தைத் தொடங்கினார். ஸ்ரீ அரவிந்தர் எழுதிய சாவித்திரி கவிதையானது, அன்னையினுடைய ஆன்மீக அனுபவங்களை விவரிக்கக்கூடிய கவிதையாகக் கருதப்படுகிறது.

38. ஸ்ரீ அரவிந்தர் The Life Divine மற்றும் Synthesis of Yoga என்ற இரண்டு நூல்களை எழுதினார். The Life Divineஇல் பிரம்மத்தைப் பற்றியும், படைப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் பற்றியும் எழுதியுள்ளார். The Life Divineஇல் தத்துவ ரீதியாக கூறியுள்ள அதே கருத்துகளை Synthesis of Yoga என்ற புத்தகத்தில் யோகமயமான கண்ணோட்டத்திலிருந்து எழுதியுள்ளார்.

39. ஸ்ரீ அரவிந்தருக்கு overmind என்ற சித்தி கிடைத்தது. அதன் பின்னர் அவர் தனிமையை நாடினார். சத்தியஜீவியத்தை அடைவதில் தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்தினார். ஸ்ரீ அன்னை உலகத்தை overmental levelலில் திருவுருமாற்றம் செய்யலாம் என்று முன் வந்தார்கள். ஆனால் பகவான் அது முழுமையான திருவுருமாற்றம் இல்லை என்று மறுத்து சத்தியஜீவிய திருவுருமாற்றத்திற்கே அன்னையையும் பாடுபடச் சொன்னார்.

40. அன்னை உலக அமைதியைக் காப்பாற்றும் பொருட்டு ஆரோவில் என்ற ஒரு புதிய நகரத்தையே நிறுவினார். அந்நகரத்தில் பிரபஞ்ச அன்னைக்கு மாத்ரி மந்திர் என்ற ஒரு கோவிலையும் நிறுவினார்.

41. அன்னையின் அஜெண்டா என்ற புத்தகம் திருவுருமாற்றத்-திற்காக அன்னை எடுத்த முயற்சிகள் பற்றியும், அதன் பொருட்டு அவர் அனுபவித்த சிரமங்களையும், வேதனையையும் பற்றி விவரமாக எடுத்துரைக்கின்றது.

42. பரம்பொருளிடமிருந்து ஸ்ரீ அரவிந்தர் பூமிக்காக ஒரு உச்சகட்ட வரத்தைக் கேட்டார். பரம்பொருள் அந்த வரத்தை வழங்கியதாக பகவான் தெரிவித்தாலும், நமக்குப் புரியாத காரணங்களுக்காக அவர் தம் உடலை நீத்து சமாதி அடைந்தார். அவருடைய உன்னத முயற்சிகளுக்கு மனித இனம் சரியான response வழங்காததே அவர் உடலை நீத்ததற்கானக் காரணம் என்று பின்னாளில் அன்னை விளக்கினார்.

43. அவர் விட்டுப் போன பணியை அன்னை தொடர்ந்து செய்து



1956ஆம் ஆண்டு பிப்ரவரி 29ஆம் தேதி சத்தியஜீவிய சக்தியைப் பூமிக்குக் கொண்டு வந்தார். அந்த நேரம் ஆசிரம விளையாட்டு மைதானத்தில் இருந்த எவராலும் அது வந்ததைக்கூட உணர முடியவில்லை. சத்தியஜீவிய பொன்னொளி இறங்கி வந்த பொழுது உலகத்தினுடைய அறியாமை என்ற இருளும் அலைஅலையாக மேலே எழுந்து கீழே இறங்கி வந்த பொன்னொளியை விழுங்கியதாகவும் அன்னை தெரிவித்தார்.

44. 1965ஆம் ஆண்டு இந்தியா பாகிஸ்தானிடையே போர் மூண்ட பொழுது அன்னை அவர்கள் ஆயுத பலத்தைப் பயன்படுத்தி பாகிஸ்தானை மீண்டும் இந்தியாவுடன் இணைக்கும்படி பிரதமர் சாஸ்திரி அவர்களுக்கு அறிவுறுத்தினார். ஆனால் பிரதமரோ போரை நிறுத்தி பாகிஸ்தானுடன் சமரசம் செய்து கொண்டார். இது பற்றி பின்னால் பேச்சு எழுந்த பொழுது அன்னை அவர்கள் இறைவனே மீண்டும் பாகிஸ்தானை இந்தியாவுடன் இணைப்பதற்கு வழி செய்வார் என்று குறிப்பிட்டார்.

45. பகவானிடமும், தன்னிடமும் வந்தவர்களை அன்னை தெய்வங்களை வழிபடுவதை விட்டுவிட்டு சத்தியஜீவியத்தையே நாடும்படி அறிவுறுத்தினார். பின்னர் தன்னை வழிபடக்கூடத் தேவையில்லை என்றும் சத்தியஜீவிய சக்தியை வாங்கிக் கொண்டு அவரவரும், தாமே இறைவனாகலாம் என்றும் தம் சீடர்களுக்கு அறிவுறுத்தினார்.

46. இராமலிங்க அடிகளுடைய அருட்பாக்களினுடைய ஆங்கில மொழியாக்கம் சிலவற்றைப் படித்துவிட்டு அவர் தன்னுடைய பாடல்களில் அருட்ஜோதி என்று விவரிப்பது சத்தியஜீவிய ஒளிதான் என்று அன்னை குறிப்பிட்டுள்ளார். இப்படி அன்னை சொல்லியிருப்பதனால் ஆசிரம வட்டத்திற்கு வெளியே இருக்கின்றவர்களில் சத்தியஜீவியத்தை உணர்ந்த முதல் நபராக அடிகளார் ஆகிறார்.

47. ஒரு பெரிய அசுரனுடைய குணத்தை மாற்றி அவனை அன்னை இறைவன் பக்கம் அழைத்து வந்தார். தான் இறைவன் பக்கம் வந்துவிட்டதால் தன்னுடைய அசுரப் படையில் இருக்கின்ற

எண்ணற்ற குட்டி அசுரர்களும் வலிமை இழந்துவிடுவார்கள் என்று அந்த அசுரன் தெரிவித்தான். துக்கத்தின் தலைவன் என்ற ஒரு பெரிய அசுரன் அன்னையின் சிறு வயதிலேயே தன்னுடைய அறிவை எல்லாம் அன்னைக்கு வழங்கிவிட்டு தன்னைத் தானே அழித்துக் கொண்டான். பொய்யின் தலைவன் மற்றும் மரணத்தின் தலைவன் என்ற இரண்டு அசுரர்களும் இன்னும் தன்னுடன் போராடிக் கொண்டிருப்ப-தாக அன்னை சொல்லியிருக்கிறார். உரிய நேரத்தில் அவர்களுக்கும் ஒரு முடிவு வரும் என்றும் அன்னை குறிப்பிட்டுள்ளார்.

48. ஒரு நாள் பெண் ஆசிரமவாசி ஒருவர் அன்னைக்கு நமஸ்காரம் செய்யும் பொழுது அவருடைய சைத்தியப் புருஷன் வெளிவந்து அன்னைக்கு முன்னால் நிற்பதைக் கண்டார். அப்பொழுது சத்தியஜீவிய சக்தியை வாங்கிக் கொண்டு சைத்தியப் புருஷன்தான் சத்தியஜீவிய மனிதனாக உருமாறும் என்று அன்னைக்கே புரிந்தது. அதுவரையிலும் சத்தியஜீவிய மனிதன் எப்படித் தோன்றுவான் என்பது அன்னைக்கே ஒரு புரியாத புதிராகத்தான் இருந்தது.

49. அன்னையும் தன்னுடைய உடம்பை நீத்துவிட்டு சூட்சும உலகிலிருந்து தன்னுடைய பணியைத் தொடர்ந்தார். அவருடைய சூட்சும ஆன்மீகப் பணியினுடைய பலன்கள் பல இடங்களில் தெரிகிறது. சோவியத் யூனியனில் கம்யூனிச ஆட்சி முடிவுக்கு வந்து அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்கும் இருந்த பனிப் போர் முடிவுக்கு வந்தது. அதைத் தொடர்ந்து பெர்லின் சுவர் இடிக்கப்பட்டு கிழக்கு ஜெர்மனி மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாம் சோவியத் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றன.

50. ஆரோவில் தொடர்ந்து செயல்படுவதால் அணு ஆயுதங்களும் உலகத்திலிருந்து ஒழிக்கப்பட்டு ஸ்ரீ அரவிந்தருடைய ஐந்து கனவுகளில் ஒன்றான உலக ஒற்றுமை நிலை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

❀ ❀ ❀





## Process of Creation - சிருஷ்டி

☆ எப்படிச் சிருஷ்டி ஏற்பட்டது என்பதைப் பகவான் *The Life Divine*இல் 13ஆம் அத்தியாயத்திலிருந்து 25ஆம் அத்தியாயம் வரை கூறுகிறார்.

(1) 13ஆம் அத்தியாயம் - தெய்வீக மாயை - அனைத்தும் அனைத்துள்ளிருக்கும் நிலையை தெய்வீக மாயை ஒன்று பலவிலும், பல ஒன்றிலும் இருக்கும்படி மாற்றுகிறது.

(2) 14ஆம் அத்தியாயம் - சத்தியஜீவியம், சிருஷ்டிகர்த்தா, பிரம்ம திருஷ்டி தான் கண்ட சத்தியத்தைச் சக்தியாகவும், ரூபமாகவும், தன்னுள்ளே வெளிப்படுத்துகிறது.

(3) 15ஆம் அத்தியாயம் - உயர்ந்த சத்திய ஜீவியம் - எல்லாம் பிரம்மத்தாலானவை. பிரம்மம் அனைத்திலும் உள்ளது, பிரம்மத்துள் அனைத்தும் உள்ளன.

(4) 16ஆம் அத்தியாயம் - சத்தியஜீவியத்தின் மூன்று நிலைகள் - அவை கடவுள், ஜீவாத்மா, அகந்தை.

(5) 17ஆம் அத்தியாயம் - தெய்வீக ஆன்மா - எந்த நேரமும் தெய்வீக ஆன்மா பிரம்மத்தின் முன்னிலையில் உள்ளது.

❒ இது ஏகனிலும், அநேகனிலும் ஒரே சமயத்தில் வசிக்கிறது.

(6) 18ஆம் அத்தியாயம் - சத்தியஜீவியமும், மனமும் - சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரியும்பொழுது மனம் ஏற்படுகிறது. இது உயிருடனும், உடலுடனும் ஐக்கியப்படுவதால் அஞ்ஞானம் பூரணமாகிறது.

(7) 19,20,21,22 - வாழ்வைப் பற்றிய 4 அத்தியாயங்கள்.

❒ உடல் உணர்வை வாழ்வு, மனத்திற்குக் கொண்டு

போய் எண்ணமாக மாற்றி, உடலை எண்ணத்தால் கட்டுப்படுத்துகிறது.

- ❒ ஆசை மனத்தில் அன்பாக மாறுகிறது.
- ❒ மாறிய அன்பு ஜீவியத்தை நோக்கி உயர்கிறது.
- ❒ பிரிந்த சக்தியும், ஜீவியமும் உயர்ந்து சத்திய ஜீவியத்தை அடைந்து சேருகின்றன.

(8) 23 - சைத்தியப் புருஷன் - ஆன்மா, வளரும் ஆன்மாவாக மாறுவது, சைத்தியப் புருஷன். இது அகத்தில் மட்டும் முதிர்ச்சியடைவதால் பாலவாதம், உன்மத்த வாதம், பிசாச வாதம் ஏற்படுகிறது.

(9) 24 - ஜடம் - சத் புருஷன் பிரபஞ்சத்தில் வெளிப்படுவதை மனம், புலன் வழிக் காண்பதால் ஏற்படுவது ஜடம்.

(10) 25 - ஜடத்தின் சிக்கல் - அஞ்ஞானம், தமஸ், பிரிவினையால் ஜடம் திருவுருமாறுவது தடையாகிறது.

மேற்சொன்னவற்றை மேலும் விளக்கலாம்:

I. பிரம்மம் - சிருஷ்டிக்க முடிவு செய்கிறது - சத் ஏற்படுகிறது.

சத் என்பது சத் புருஷனாகும்.

சத் என்பது சத், சித், ஆனந்தமாகும்.

- ➧ சத் தன்னையறிவதால் சித் ஆகிறது.

  சித் தன்னை அனுபவிப்பதால் ஆனந்தம் ஏற்படுகிறது.
- ➧ சச்சிதானந்தம் என்பது அக்ஷரப் பிரம்மம்.

  இது அகம், புறமாகப் பிரிகிறது.

  இப்பிரிவினையே சிருஷ்டிக்கு ஆரம்பம்.

  அகம் - வளரும் ஆன்மாவான சச்சிதானந்தம்.

  புறம் - சத்தியஜீவியம்.

  [சத் - சித் - ஆனந்தம் → → → (அகம்)

  சத்தியம் - ஞானம் - அனந்தம் → → → (புறம்)

  சத்தியமும் ஜீவியமும் சத்தியஜீவியமாகின்றன.

  சத்தியஜீவியத்தில் அனந்தம் விட்டுப் போகிறது.]

II. சத் புருஷன் மூன்றாகப் பிரியும் பொழுது, அவற்றின் மூன்று சக்திகளும் சேர்ந்து

பிரம்மம் - புருஷன் - ஈஸ்வரன்

மாயை - பிரகிருதி - சக்தி என மாறுகின்றன.

i. மாயை தானே சிந்தனையால் சிருஷ்டிக்க வல்லது - காலம்.

ii. பிரகிருதி மாயை சிருஷ்டித்ததைச் செயல்படுத்த வல்லது - காலத்தைக் கடந்தது.

iii. சக்தி தானே சிருஷ்டித்து செயல்படுத்த வல்லது - மூன்றாம் நிலைக் காலம்.

- ➧ மாயையிலிருந்து பிரகிருதி வழியாக சக்தியை அடையும் பொழுது பிரம்மம் புருஷனாகி ஈஸ்வரனா-கிறான்.

  அது காலம் காலத்தைக் கடந்து மூன்றாம் நிலைக் காலமாகும் பாதை.

*அதுவே அற்புதம்.*

III. சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிந்து மனம் ஏற்படுகிறது.

சத்தியஜீவியம் சிருஷ்டியை முழுமையாகப் பார்க்க வல்லது.

மனம் துண்டு செய்யும் கருவி.

அதன் பார்வை பகுதியானது.

என்றாலும் அடுத்த பக்கத்தை மாறி பார்க்க முடியும்.

அப்படிப் பார்க்க மறுத்தால் மனம் சத்தியஜீவியத்தினின்று விலகுகிறது.

*இதுவே அஞ்ஞானம்.*

IV. மனத்தில் ஞானம் உறுதியுண்டு.

ஞானம் உறுதி மேல் செயல்பட்டால் சக்தி வெளிப்படுகிறது.

அச்சக்தியின் லோகம் வாழ்வு.

வாழ்வுக்குச் சலனம், சக்தியுண்டு, ரூபமில்லை.

V. வாழ்வு சலனத்தையிழந்தால் சக்தி ரூபத்துள் மறைகிறது.

வாழ்வு சலனத்தை முழுமையாக இழந்தால் முழு சக்தியும் ரூபத்துள் மறையும்.

சக்தியையும், சலனத்தையும் இழந்த ரூபம் ஜடம்.

***இதுவரை சிருஷ்டி.***

***இனி பரிணாமம்.***

VI. ஜடம் அசைந்தால் சக்தி வெளிப்பட்டு வாழ்வு எனும் லோகம் எழுகிறது.

VII. வாழ்வில் உறுதியும் ஞானமும் இணைந்தால் சலனமிழந்து ஞானம் எழுந்து வாழ்வு மனமாகிறது.

VIII. ஞானமும், உறுதியும் ஐக்கியமானால் மனம் உயர்ந்து சத்திய ஜீவியமாகிறது.

IX. இம்மாற்றம் மௌனம், ஜோதி, ஞானம், தெய்வீகம் ஆகிய நிலைகள் வழிச் சென்று,

X. பொன்மூடியை உடைத்து சத்தியஜீவியத்தை அடைகிறது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தவிர்க்க முடியாதது முதன் முறை சமர்ப்பணம். ஆனால் அதை ஆரம்பிக்க, பூரணமாக மனம் ஒருநிலைப்படுதல் தேவை. மனம் பூரணமாக ஒருநிலைப்பட்டால், ஜீவன் முழுவதும் இறைவனை நோக்கி விழிப்புறும்.

***ஜீவன் விழித்தால் சமர்ப்பணம் பலிக்கும்.***



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **கல்கத்தா அன்பர்**

½ கோடி சொத்தைக் கொடுத்தவர் பணத்தின் மதிப்பை விடவில்லை.

அளவுகடந்த ஆச்சரியமாக ஸ்ட்ரோக் (stroke) வந்த கணவனை மனைவி காப்பாற்றிய பின்னும் கருமாதியை விடவில்லை. அது கான்சராயிற்று. அவர் இறந்துவிட்டார். ஸ்ட்ரோக் முடிவானது. மனைவி தன் ஆழ்ந்த நம்பிக்கையால் காப்பாற்றினார். பிழைத்தெழுந்தபின் கணவனுக்கு அன்னையிடமோ, காப்பாற்றிய மனைவியிடமோ பெற்ற பலனுக்குரிய நன்றியறிதல் இருந்திருக்க வேண்டும். அல்லது பிழைக்கும் வரை நம்பிக்கையற்ற கணவன் பிழைத்தபின் அன்னை மீது நம்பிக்கை கொண்டால் மனைவிக்குக் கான்சர் வந்திருக்காது.

- நம்பிக்கையற்ற கணவனை மனைவி தன்னுடைய நம்பிக்கையால் காப்பாற்றினாள். கணவனுக்கு நம்பிக்கை-யில்லை என்ற குறை நிறையவில்லை.
- அக்குறை, குறையாக இருந்ததால், மனைவிக்குக் கான்சர் வந்தது. அக்கான்சர் கணவனால் வந்தது என்பதால் பிரார்த்தனையால் போகாது. அது போக, மனைவிக்குள்ள நம்பிக்கை மேலும் வளர வேண்டும்.
- *இயல்பாக உள்ள நம்பிக்கையை உயர்த்துவது மனம் மாறுவது போலில்லை. சுபாவத்தை மாற்றுவது போலாகும். அது யோக முயற்சி. அன்பர்கட்கு முடியாது என்பதில்லை, சிரமம்.*

நம்பிக்கை 8 levelsல் இருக்கிறது.

இது இரண்டாம் level. எட்டாம் level நம்பிக்கை யோகத்திற்கு வேண்டும்.

நாம் கடந்ததை மீண்டும் நாடக்கூடாது. (Degree) பட்டம் எடுத்தபின் பள்ளியில் படிக்கலாமா?

இந்த அன்பரின் அனுபவம் நமக்கெல்லாம் பெரிய படிப்பினை.

சுமார் 20 முறை கருமாதிக்குப் போகலாமா என மனைவி கேட்டார்.

ஒவ்வொரு முறையும் முடியாது என மீண்டும் மீண்டும் சொல்வது சிரமம்.

அவர் கேட்பார். முடியாது என பதில் அனுப்புவேன்.

போனாரா, இல்லையா எனத் தெரியாது.

கணவன் தன் குறையை நிறை செய்யாமல், கருமாதிக்குப் போகும் ஆசை தீவிரமாக இருந்தது. கான்சர் வந்து இறந்து விட்டார்.

இது தவறு எனக் கூறுவதைவிட இது இயல்பு, இப்படித்தான் நாமும் இருக்கிறோம் என அறிவது சரி.

மிகப்பெரிய மனிதனின் உயர்ந்த குணம் நம்மிடமிருக்கும்.

அல்பமானவனின் அசிங்கமான பழக்கமும் நம்மிடம் இருக்கும்.

உயர்வு-தாழ்வு என்பது உயர்வை விலக்கும்.

சில உதாரணங்களில்லாவிட்டால் சில சட்டங்கள் புரியாது.

அதில் கல்கத்தா அன்பரும் ஒன்று.

இந்த அன்பரைவிட உயர்ந்த நம்பிக்கையுள்ளவரிலர்.

கணவனுக்கு (stroke) ஸ்ட்ரோக் வந்தபொழுது காப்பாற்றியது மனைவி.

பல ஆண்டுகட்கு முன் இக்கல்கத்தா அன்பர் அவர் தம்பியுடன் வந்தார்.

இவரை விட்டுவிட்டு தம்பி போய்விட்டார்.



அன்பருடைய இரு கைகளையும் சேர்த்து நான் பிடித்தபொழுது இவர் முகம் ஜோதிமயமாயிற்று.

ஜோதி சற்று நேரத்தில் வளர்ந்து மேலே எழ ஆரம்பித்தது.

ஆத்மா பக்குவமானது என்பதால் ஜோதியை ஏற்று மோட்சத் தகுதிக்கு வந்துவிட்டது.

நான் இவருடன் தனியே இருக்கிறேன். கலா கீழே போய்விட்டாள்.

தலை கவிழ்ந்தது. ஜோதி உடலை விட்டுப் போய்விட்டது.

ஆத்மா மோட்சத்தை ஏற்றுக்கொண்டது.

- ❖ அன்பர் ½ மணியில் மோட்சமடைந்துவிட்டார் என இவர் உடலை நான் எவரிடம் தருவது? இவர் தம்பி பாண்டியிலிருக்கிறார். அவர் கீழே போனவர் கீழே-யிருக்கிறாரா, வீட்டிற்குப் போய்விட்டாரா எனவும் தெரிய-வில்லை.
- ❖ வெளியில் போன ஆத்மாவை மீண்டும் உள்ளே கூப்பிடலாம். அது அன்பர் செய்ய வேண்டும். கூப்பிட்டால் வரலாம். நிச்சயமாகத் தெரியவில்லை. மீண்டும் சற்று முகம் தெளிந்து போன உயிர் வந்தது. அதற்குள் கலா வந்து விட்டாள்.
- ❖ அன்பர் ஆனந்த சாகரத்திலிருக்கிறார். ஒரு ஆபத்து வந்து போனது அவர் அறியாதது. கலாவைப் பிடித்துக் கொண்டு எழுந்தார். உடல் முழுவதும் பிரம்மாண்டமான பொலிவு. கீழே காப்பி தயார் செய்யச் சொல்லி பிறகு அழைத்துப் போகச் சொன்னேன். தம்பியும் வந்து அழைத்துப் போய்விட்டார்.

*அற்புதமான அன்பர். அளவுகடந்த நம்பிக்கையுள்ளவர்.*

*கருமாதியை விட முடியவில்லை.*

*பெற்ற பெரும் பேற்றுக்கேற்ப மனத்தைக் கணவன் மாற்ற முடியவில்லை.*

*இது தர்ம சங்கடம்.*

"விடலறிய என் போல்வார் இதயம் தோறும்" என்றது போல் பழைய பழக்கங்களை விடுவது எளிதல்ல.

நாம் ஒரு பழக்கத்தை விட முயன்றால் சிரமம் தெரியும்.

பழக்கம் உடலில் பொருளில் (substance) புதைந்துள்ளது.

அதனால் அன்னை நம் ஆசையைப் பூர்த்தி செய்து அழைத்துக் கொள்கிறார்.

ஆசையை விட்டகன்று அன்னையை ஏற்கும் பக்தர் பெரியவர்.

பாதாளத்தின் செயல் (Subconscious acts) சாப்பிடுவது, உதடு அசைவது, கண் இமைப்பது, தலை சொறிவது போன்றவற்றை விட்டுவிட முயன்றால் சிரமம் விளங்கும்.

அதுவும் ஆச்சரியமாக முதல் முறை பலிப்பது தெரியும்.

வெறுப்பு விருப்பாவது, கருமி தாராளமாவது, விருந்தாளி பிடிக்காதவருக்கு விருந்தாளி இனிப்பது (transformation) திருவுருமாற்றம்.

அப்பெரிய காரியங்கள் நடப்பதும் ஒரு முறை காணலாம்.

இந்த அன்பரின் அண்ணன் மகன் 1957இல் என் மாணவன்.

✡ **அன்பரின் கண்**

7 வருஷமுன் இவர் (ரெடினா) கண் திரை கிழிந்தது.

புது லாசர் ட்ரீட்மெண்டால் குணமாயிற்று. ஆப்பரேஷனில்லை.

இப்பொழுது அடுத்த கண்ணுக்கு அதே பிரச்சினை வந்தது.

இவருக்கு ஏற்கனவே இது போன்று ஒரு அன்பருக்கு குணமானது தெரியும். ஆனால் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டார்.

கண்ணால் கண்டதும் நம்பிக்கை தருவதில்லை.

ஒரு முறை அனுபவித்தாலும் அடுத்த முறை அதை நம்ப



முடியாமல் மனம் பழைய நிலைக்குப் போகிறது.

நம்பிக்கையையும் அறிவையும் சேர்ப்பது முறை என பகவான் கூறுகிறார். பொறுமையும் வேகமும் இணைவது அவசியம்.

இதே க்ஷணம் வேலையை முடிக்க முடிய வேண்டும், அத்துடன் யுகாந்த காலம் பொறுக்கும் பொறுமையும் தேவை.

அவை நம் ஜீவியத்தில் சந்திக்க வேண்டும்.

உலகில் உயிருள்ளது ஒன்றுண்டு எனில் அது (Romance) காதல், கல்யாணமில்லை.

ஒரு முறை இதயம் திறந்து விரும்பியதை அதனால் உயிருள்ளவரை மறக்க முடியாது.

ஏன் இந்தத் தீவிரம் என அறிஞர்கள் கேட்டதில்லை.

கேட்டால் அவர்கட்குப் பதிலில்லை.

ஆண் பூர்த்தியாவது பெண்ணில்.

நல்லதா, கெட்டதா என்பதில்லை. ஆணுக்குப் பெண் (complement) அடுத்த பகுதி. மரையும், ஆணியும் போல்.

ஏனெனில் இரண்டும் சேர்ந்து ஒரு காரியத்தைப் பூர்த்தி செய்கின்றன. பெண் அழகியா, நல்லவளா, கெட்டவளா என்பது அவனுக்கில்லை.

ஆழ்ந்த மனதில் - ஆத்மாவில் - இவள் என் (complement) மறுபகுதி எனப்பட்டால் அவள் மீது எழும் தீவிர உணர்ச்சி காதல் எனப்படும்.

அது எழுந்தால், உயரே வீசப்பட்ட கல் போல், தரைக்கு வரும்வரை அது நிற்காது.

அதில் நம்பிக்கை (faith) எழும்.

"என்னிடம் என்ன இருக்கிறது? ஏன் இந்த ஆசை?" என அவள் கேட்பதும் உண்டு.

அவளுக்குத் தெரியாவிட்டாலும் காதல் எழும், எழுந்தது தணியாது.

இருவரும் அறிவது அபூர்வம்.

அறிந்தால் வேகம் அதிகமாகும்.

தடைகள் எழும்.

முடிவில் நிறைவேறும்.

எளிய உணர்ச்சி நிறைவேறி மரணத்தில் முடியும். - Romeo Juliet.

ஆத்மாவின் ஆர்வம் அணையாது.

ஏனெனில் நம்பிக்கை (Faith) வேலை செய்கிறது.

இதுவரை காதல் உலகில் பூர்த்தியானதில்லை.

ஸ்ரீ அரவிந்தம் பூர்த்தியானால் காதல் பூர்த்தியாகும்.

அதற்கு நம்பிக்கையும் அறிவும் Faithம் Reasonம் இணைய வேண்டும்.

*The Life Divine* தருவது அறிவு Reason.

நம்பிக்கை Faith நம்முடையது.

இணைவது அருள் Grace. சத்தியம், தூய்மை பூர்த்தி செய்யும்.

✡ **இரு அன்பர் இணைந்து செயல்பட்டுச் சிறப்புறும் வழி.**

இது தம்பதிகள் தங்கள் திறனால் குடும்பத்தை உயர்த்தும் வகை.

சுமார் 50 முதல் 100 ஆண்டில் எக்குடும்பமும் சாதிப்பதை அன்பர் தம்பதிகள் 5 ஆண்டில் பூர்த்தி செய்யலாம். அதற்கு அவரிருவரும்

- ❖ எந்த நேரமும் இணை பிரியாமல் செயல்பட வேண்டும்.
- ❖ மனம் விட்டுச் சுதந்திரமாகப் பழக வேண்டும். மறைக்கும் விஷயமிருக்கக் கூடாது.
- ❖ அளவு கடந்த தெம்பு வேண்டும்.

  4 அல்லது 5 மணிக்கு மேல் தூங்க முடியாத உடல் நிலை ஏற்படும்.
- ❖ சாதிக்கும் தீவிரம் உச்சகட்டத்திலிருக்கும்.



- ❖ க்ஷணத்தில் முடிக்கும் நோக்கம் வேண்டும்.
  - ✧ இருவர் சாதிக்க முடிவு செய்தால், முடியாதது என்பதில்லை.

    இருவர் உணர்ச்சிபூர்வமாகச் சந்திப்பது அரிது.

    அதை நாம் காண்பதில்லை.
  - ✧ மனத்தை 5 அல்லது 6 நிலைகளாகப் பிரிக்கலாம் (levels).

    1. மேல் மனம்.
    2. மேல் மனத்தைக் கடந்தது.
    3. பொறுப்புள்ள ஆழ்ந்த மனம்.
    4. மேல் மனத்தை ஏற்கும் உணர்ச்சி.
    5. (2) நிலையை ஏற்கும் உணர்ச்சி.
    6. பொறுப்புள்ள ஆழத்தை ஏற்கும் உணர்ச்சி.

    இந்த 6 லெவல்களும் நான் கூறும் இலட்சியத்திற்கு உதவா. இவை அல்பமானவை, ஆழமற்றவை, வெட்கப்படக் கூடியவை. பலர் இந்த 6 லெவலளவுக்கும் வரமாட்டார்கள். இந்த 6 லெவல்களில் ஒன்று அவர்கட்கு முக்கியமாகத் தோன்றும்.
  - ✧ தெளிவான மனம் இந்த 6 லெவல்களைக் கடந்தது.
  - ✧ தம்பதிகள் சந்திக்க வேண்டும் என நான் கூறும் பொழுது அவர்கள் இந்த 6 லெவல்களைக் கடந்து உயர்ந்து சந்திக்க வேண்டும்.
  - ✧ என் குரு ஸ்தானத்திலிருந்தவர், 1948 முதல் 1978 வரை உடனிருந்த நண்பர், பேராசிரியர், பிரபலமாக நல்லவர் எனப் பெயர் பெற்ற உடன் வேலை செய்பவர், பெரிய குடும்பத்து பையன், பணக்காரன் என ஊர் நினைத்தவர், பரோபகாரி, இனிமையான பண்புள்ள ரைட்டர் ஆகியவர் மேற்சொன்ன 6 லெவல்களில் 1,2,4,1,1,3 லெவல்களைச் சேர்ந்தவர்.

- இந்த 6 லெவல்களைக் கடந்தால் மனம் சக்தி பெறும்.

  அந்தச் சக்தி தூய்மையாக, உண்மையாக, சத்தியமாக இருக்கும்.

  அல்லது எதிராகவுமிருக்கும்.

  உணர்ச்சி எழுந்து ஆழ்மனத்தை ஏற்றால், மனத்தின் சக்தி வெளிப்படும்.

- **இருவருடைய அப்படிப்பட்ட மனச்சக்திகள் உயர்ந்தவை. அவை இணையும்பொழுது அபார சக்தி எழும். 7 என்பதும் 8 என்பதும் எண்கள். இரண்டும் இணைந்தால் 78 ஆகிறது. தம்பதிகளின் தனிப்பட்ட சக்தி இணையும்பொழுது அடுத்த நிலைக்குப் போகும்**.

- அதை அன்னைக்குச் சரணம் செய்தால் மேலும் உயரும்.

  கணவன் 7, மனைவி 8 ஆனால் தம்பதி 78 ஆகும்.

  அவரிருவரும் அன்பராகி சரணாகதியை ஏற்றால் $78^2$ ஆகும். i.e. $78 \times 78 = 6084$ என உயரும்.

- தம்பதிகள் இதை உற்பத்தி செய்து குடும்பத்திற்குப் பயன்படுத்தலாம்.

- **முடியாது என்பதில்லை, வேண்டாம் என்பதுண்டு**.

- மனம் சக்தி வாய்ந்தது (mental power). உணர்ச்சி அதைவிட சக்தி வாய்ந்தது (emotional power).

- வேலைக்காரி மகன் B.Sc., படித்து போஸ்ட் ஆபீஸில் வேலை செய்து AMIE படித்து இன்ஜினீயரானான். டிராயிங் மாஸ்டர் பையன் B.A., பாஸ் செய்து LICஇல் ஆபீசராக இருக்கிறான். இவர்கள் பெரிய சம்பளக்காரர்கள். ஆனால் இந்த இருவரும் மனிதத்தன்மை உடையவரிலர். காவல்காரன் முனிசாமி இவரிருவரை விட உயர்ந்த மனிதன்.

- நாம் நம் உலகில் காண்பவர் எவரும் மனிதத்



தன்மைக்கு எடுத்துக்காட்டான சிறந்தவரிலர்.

## ✡ ஜோஸ்யர் குடும்பத்து பெரிய உத்தியோகஸ்தர்

IAS படித்தவர், பெரிய ஸ்தாபனத்தில் ரிஜிஸ்ட்ராராக இருந்தவர்.

ஜோஷி என்றால் ஜோஸ்யம் சொல்பவர்.

ஏழைப் புரோகிதர்.

பெற்றுப் பழக்கம், கொடுத்துப் பழக்கமேயில்லாதவர்.

மனம் அறிவுள்ளது. குரு ஸ்தானத்தில் எனக்கிருந்தவர் போன்றது.

வெகுமதி கொடுக்கக் கொண்டு வந்த 30 புத்தகங்களை வந்த அகில இந்திய தலைவருக்குக் கொடுக்காமல் எடுத்துப் போனார்.

இதுதான் சுபாவம்.

விருந்தாளியை "எப்பொழுது போகிறீர்கள்?" எனக் கேட்டு விட்டுப் பேசும் ஊரில் பிறந்தவர், 'அரை மணியில் போகிறேன்' என்றால் சந்தோஷமாகப் பேசுவார்கள்.

வறண்ட ஊர். வறண்ட உள்ளம்.

அப்படிப்பட்டவருக்குக் கட்டுப்பாடு எனில் தினமும் 3 வேளை 10 பேருக்குத் தன் செலவில் விருந்து செய்யச் சொல்ல வேண்டும். அதைப் பத்து வருஷம் செய்த பின்னும் விருந்தாளியை "எப்பொழுது போவீர்கள்?" என வரவேற்கும். **சுபாவம் மாறாது**.

மாற விரும்பினால் அன்னை மாற்றுவார். இல்லையேல் இல்லை.

அப்படிப்பட்டவருக்குக் கட்டுப்பாடு (Discipline),

1) அவர் சைவமானால் மாமிசம் சாப்பிட வேண்டும்.

   அசைவமானால் சைவமாக மாற வேண்டும்.

2) தன்னைப் பார்த்தவருக்குத் தீட்டுப்படும் என அறிய வேண்டும்.

3) விருந்தை வாழ்க்கை இலட்சியமாகக் (lifestyle) கொள்ள வேண்டும்.

4) எல்லோரும் பெற்ற பின்னே எதையும் பெற சம்மதிக்க வேண்டும்.

5) மாமியாரிடம் அல்லது மருமகளிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும்.

6) வேலைக்காரிக்கு வேலைக்காரியாக வேண்டும்.

7) கணவன் (அ) மனைவியை மறுத்துப் பேசக்கூடாது.

8) வீட்டில் நடக்கும் அத்தனை தவற்றுக்கும் தானே பொறுப்பேற்க வேண்டும்.

9) கையிலுள்ள பணம், பொருள் முழுவதும் தானம் தர வேண்டும்.

10) எவரைக் கண்டாலும் தீண்டாதவராக ஒதுங்க வேண்டும்.

அனைவரும் அவரை மட்டமாகப் பெயரிட்டுக் கூப்பிட வேண்டும்.

✡ ***ஞானி இலட்சம் பிறவிக்குப் பின் மோட்சம் கிடைக்கும் என நாரதரிடமிருந்து அறிந்து சோர்ந்து போனான்.***

***'கிடைக்கும்' என்பது பக்தனைப் பரவசப்படுத்தி, பரவயம் க்ஷணத்தில் பலித்தது.***

❖ ஞானி, பக்தன் - இலட்சம் பிறவிக்குப் பின் மோட்சம்.

இது பெரிய ஆன்மீக உண்மை. இலட்சம் பிறவிகளை ஒரு க்ஷணமாக்கியது.

*இதன் மூலம் காலம் காலத்தைக் கடக்கிறது.*

காலத்தை மனம் உற்பத்தி செய்கிறது.

அதனால் காலம் என்பது மனப்பான்மை.

ஆசையாக இருந்தால் 1 மணி 1 நிமிஷமாகும்.

மனம் காலத்தை நிர்ணயிக்கும்.



யுகம் க்ஷணமாவது மனத்தின் போக்கால் நிர்ணயிக்கப்படுகிறது.

காலத்தைப் பற்றிய உண்மையும் பணத்தைப் பற்றியதும் ஒன்றே.

**பணம் என்பது மனம். மனம் என்பது குணம். நினைப்பு.**

நமக்கு இலட்ச ரூபாய் சம்பாதிக்க முடியும் என நினைத்தால் அந்த நினைப்பு நம் திறமைக்கேற்ப பலன் தரும்.

வருமானம் எவ்வளவு உயர்ந்தாலும் இலட்சத்தைத் தாண்டாது.

**மனம் ஏற்படுத்திய எல்லையது.**

இலட்சம் பிறவிக்குப் பின் ஆண்டவனையடையலாம் என்பதில் மனம் சந்தோஷப்படுமானால் அந்தச் சந்தோஷம் அந்த நாளை இன்று கொண்டு வரும்.

மனம் புரிந்து கொள்வது உண்மை. பணத்தைப் பற்றி நீ அனைத்தையும் அறிய வேண்டும் எனக் கூறியது அதனால் தான்.

அது புரிந்தால், அது நமக்குண்டு எனப் புரிந்தால் பலிக்கும்.

(English) ஆங்கிலம் ஒரு பாஷை. அதைப் பேசுவது வெட்கம் தருகிறது.

வெட்கம் போனால், (English) ஆங்கிலம் பேசலாம்.

**மனம் பணத்தைப் புரிந்து, ஏற்றால் அத்தொகை வரும்.**

புரிய வைப்பது என் வேலை.

ஏற்பது உன் பங்கு.

பலிப்பது அன்னைக்குரியது.

ஞானி, பக்தன் நிலைகளைக் கடந்தது அன்பன் நிலை.

அன்பனுக்குரியது ஞானமோ, பக்தியோ இல்லை.

**அது *அன்னை.***

இதை அறிபவனே அன்பன்.

*தொடரும்....*

❀ ❀ ❀

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

171. *அழகு கண்ணை மறைக்கிறது.*

✧ **அன்பு தவற்றை விலக்குகிறது.**

172. *பசித்தாலும் புலி புல்லைத் தின்னாது.*

✧ **எதை மறந்தாலும் சமர்ப்பணத்தை மறக்க முடியாது.**

173. *பெற்ற பிள்ளை கைவிட்டாலும், நட்ட பிள்ளை காப்பாற்றும்.*

✧ **உலகமே ஒதுங்கிப் போனாலும், அன்னை நெருங்கி வருவார்.**

174. *சாட்சி காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழலாம்.*

✧ **மனிதனைக் கேட்பதைவிட மதரைக் கேட்கலாம்.**

175. *மடியில் கனமில்லாவிட்டால், வழியில் பயமில்லை.*

✧ **மனம் அன்னையிலிருந்தால், பயம் எந்த நேரமும் இல்லை.**

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அருளின் எதிர்காலச் செயலை, அதுவும் பிறர் வாழ்விலறிவது, அருளுடன் தொடர்புள்ளதாகும்.





## P.118 Only a flickering zest they left behind

**மின்னும் உற்சாகம் நின்ற பின்னணி**

- ☆ **மரண களைப்பு தரும் அசுர காமம்**
- ☆ **வேகம் நிறைந்த ரகம் கணக்கற்ற வண்ணம்**
- ☆ **எதனாலும் திருப்தியடையாத மாறாத ஒன்று**
- ☆ **புதியது அதன் பார்வைக்குப் பழைய ரூபமாயிற்று**
- ☆ **கடந்ததைத் திரும்பத் திரும்பக் காட்டும் காலத்தின் மணிகள்**
- ☆ **எந்த மாற்றமும் அழிக்காத அடிப்படை அதிருப்தி**
- ☆ **அவள் பிரம்மத்தின் ஆன்மா, நிலையற்ற இலட்சியம்**
- ☆ **நிறைந்து வரும் சந்தோஷம் நிறைவால் சலித்து**
- ☆ **மாறிவரும் சந்தோஷமும் வலியும் உந்தும்**
- ☆ **ஆழத்தின் அவதி ரசித்தனுபவிக்கும் வேதனை**
- ☆ **எட்டாத இலக்கு தரும் மீளமுடியாத கவர்ச்சி**
- ☆ **வினோதமான தாகம் பெறும் விபரீதமான ருசி**
- ☆ **தானே தேடிப் பெற்ற முடிவை ஏற்க முடியாத சோகம்**
- ☆ **மோட்சத்தைப் பெற நரகத்தை நோக்கிப் போடும் நடை**
- ☆ **நிலையற்றதை நம்பி, ஆபத்தின் துணை தேடி**
- ☆ **விதியின் விளையாட்டு விரும்பி நாடிய ஏணை, தூளி**
- ☆ **இத்தனையும் கடந்த காலத்தைத் தாண்டிய தூய்மை**
- ☆ **இழந்த உலகப் பேரின்பம், பார்வையில் சொட்டுகிறது**
- ☆ **அனந்தத்தின் முகம் அவள் ஆர்வத்தின் வேகம்**

☆ உரிமையுள்ள அழகு, விலக்க முடியாத சந்தோஷம்
☆ முடிவற்ற ஆனந்தம் அவள் மூலமான இருப்பிடம்

☆ புராதன முகத்தின் நிறைவான மகிழ்வு ஞானோதயமாக எழுகிறது
☆ சோக இதயம் சொர்க்கமாகக் கண்ட திடீர்க் காட்சி
☆ இழப்பது அவசியமில்லை என எடுத்துக்காட்டும் பாங்கு
☆ வருத்தம் தோய்ந்த பயம் நிறைந்த சூழல்
☆ தடமாடும் சுவடுகளின் நிலையற்ற தரை
☆ ஆனந்தம் நிறை உருவம் அழகுற வந்தது
☆ அடுக்கடுக்கான கட்டடத்தின் அழகான கட்டமைப்பு
☆ சிருஷ்டியின் உச்சியில் வட்டமிடும் சக்தி
☆ நீலவானம் நிரந்தரமாக எட்டுவது
☆ உடலும் ஆன்மாவும் இதமாக இணையும்
☆ மோட்சம் வரை எழும், எண்ணம் நம்பும் எழுச்சி

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பெரிய பலன்; பெரிய இலாபம்; பெரிய வருமானம் போன்றவை பெருந்திறனால் மட்டும் பெறக்கூடியன அல்ல. நல்ல பெரிய சூழ்நிலையில் ஒரு சிறு சாதகத்தாலும் வரலாம்.

*பெரிய சூழ்நிலையில் சிறு செயல்*
*பெரும் இலாபம் தரும்.*



# யோக வாழ்க்கை விளக்கம் VI

கர்மயோகி

**II/1) அனந்தனின் வெளிப்பாடுகள் ஆயிரம்.**
**மனிதனில் தனித்தன்மை அமையும் வரை அது வரும்.**
**அந்நிலையில் அது பொதுத்தன்மையை இழக்கும்.**
**இழந்து அனந்தனை முழுமையடையச் செய்யும்.**

- **மனிதனில் மறைந்துள்ள தெய்வம்.**
- **ஜடத்தின் பிரம்மம். கண்டத்தின் அகண்டம்.**
- ***சிருஷ்டியிலுள்ள பிரம்மம்.***

☆ பிரம்மம் அனந்தம்.
☆ உலகில் உள்ள அனைத்துச் செயல்களும் அனந்தனின் வெளிப்பாடுகள் என்பதால் நம்மால் அதைப் பெரியதாக நினைக்க முடியவில்லை.
☆ சூரியோதயம் அற்புதம், மழை பெய்வது அருள். அவற்றை நாம் கருதுவதில்லை.
☆ சேல்ஸ்மேன் MLA ஆனால் நம் கண்ணில் படுகிறது. அவனே மந்திரியானால் உலகம் அதைப் பெரு நிகழ்ச்சியாகக் கருதுகிறது.
☆ கல்கத்தாவில் அஷ்டோஷ் முகர்ஜி வைஸ் சான்ஸ்லர்.
☆ திறமை வாய்ந்த இளைஞர்களை பொறுக்கி எடுப்பதில் நிபுணர்.
☆ ஏதோ ஒரு சமயம் ராதாகிருஷ்ணன் பேச்சைக் கேட்டார். மகிழ்ந்தார்.
☆ கல்கத்தாவுக்கு வந்து கமலா, லெக்சர்ஸ் - கமலா அவர் மகள் - தரும்படிக் கேட்டார்.
☆ அதிலிருந்து ராதாகிருஷ்ணன் பிரபலமாகி ஆக்ஸ்போர்டில்

Fellow ஆனார், வைஸ்சான்ஸ்லர் ஆனார். அமெரிக்க, ரஷ்ய தூதுவரானார், உபஜனாதிபதி, ஜனாதிபதியானார்.

☆ இவ்வளவும் அவருள் புதைந்துள்ள திறமைகள்.

முகர்ஜி அவை வெளிப்பட உதவினார்.

☆ **மனிதனுள் தெய்வம் மறைந்துள்ளது**.

☆ எந்த அளவுக்கு மனிதன் அதை உணர்கிறானோ, அந்த அளவுக்கு அது அவன் வாழ்வில் வெளிப்படும்.

☆ மனிதக் குரங்கில் மனிதன் மறைந்திருந்தான்.

☆ குரங்கு விழித்தபின் இரண்டு கால்களால் நடந்தது.

☆ அறிவை வளர்த்தது.

☆ பகுத்தறிவு ஏற்பட்டது.

☆ வேட்டையாடிய மனிதன் விவசாயம் செய்தான்.

☆ விவசாயி வியாபாரியானான்.

☆ நகரத்தை ஏற்படுத்தினான்.

☆ கலை வளர்ந்தது, கற்பனை உற்பத்தியாயிற்று, நாடகம் எழுதினான்.

☆ சாம்ராஜ்யம் சமைத்தான்.

☆ கடலில் கப்பலோட்டினான்.

☆ வானில் விமானத்தில் பறந்தான்.

☆ விஞ்ஞானம் பிறந்தது.

☆ கம்பனும், காளிதாசனும் பிறந்தனர்.

☆ அமெரிக்கா போன்ற புது நாடுகளை ஏற்படுத்தினான்.

☆ சந்திர மண்டலம் போனான்.

☆ மக்களாட்சியை நிறுவினான்.

☆ சிறுவர்களைப் பெரியவர்களாக மதித்து நடத்தினான்.

☆ பணம் பெருவாரியாய்ப் பெருகியது.

☆ கொடுமை ஏற்பட்டு ஒழிந்தது.



☆ இத்தனையும் அவனுள் மறைந்திருந்தன.

☆ இனி வரப்போவது ஏராளம்.

☆ மனிதன் தெய்வமாகி, தெய்வத்தைக் கடக்கலாம்.

☆ மனநிறைவு பெறலாம்.

☆ மண வாழ்வும் மனநிறைவு பெற முடியும்.

○ ○ ○

**II/2) நாம் பரம்பொருளை எண்ணத்தால் அறிய முயல்கிறோம்.**

**எண்ணம் பரம்பொருளை விளக்கும் கருத்தை அறியும்.**

**ஒரு சிறப்பான (unique) எண்ணம் அனந்தனை அறியலாம்.**

**மனத்தால் பரம்பொருளைப் பார்க்கலாம்.**

**அதற்கு மனம் தன் நிலையில் பரம்பொருளை எட்ட வேண்டும்.**

**அதாவது சத்தியஜீவியத்துடன் தன் முந்தைய தொடர்பை மீண்டும் பெற்று அங்கிருந்து தன் ஆதியான ஜீவியத்தை அடைந்து தன்னையறிவதை நிறுத்தி, சத்தியமாகி, பின்னர் சத்திலிருந்து விலகி பரம்பொருளைத் தொட வேண்டும்.**

**மனம் வழி பிரம்மத்தை அடையும் வழி.**

☆ பிரம்மம் எல்லா லோகங்களிலுமிருப்பதால், எந்த லோகத்திலிருந்தும் - ஜடம், பிராணன், மனம் - பிரம்மத்தை எட்டலாம் என்பது தத்துவம்.

☆ எந்த ஓட்டரும் (வாக்காளரும்) ஜனாதிபதியாகலாம் என்பது உண்மை.

நடைமுறையில் அரிது. அது போன்ற தத்துவம் இது.

☆ மனத்திலிருந்து பரம்பொருளை - பிரம்மத்தை - அடையும் வழியுண்டா எனக் கருதுவது இச்செய்தி.

☆ தத்துவ ரீதியாக இது முடியும். நடைமுறைக்கு எப்படி என்பது கேள்வி.

☆ பிரம்மம், பரம்பொருள் என்பது அவரவர் நிலைக்கேற்ப விளக்கப்படும்.

☆ President, தலைவர் எனில் அவன் வேலை செய்யும் கம்பனி தலைவராகும். எத்தனையோ நிலைகள் இருப்பதால் - பஞ்சாயத்து, பாங்க், சட்டசபை, வாரியம் - தலைவர் என்ற பதவி அந்தந்த ஸ்தாபனத்திற்குப் பொருந்தும். நாட்டின் தலைவரை மனதில் நினைத்தாலும், நடைமுறையில் பதவி உயர்வு வரும்பொழுது, நாமுள்ள ஸ்தாபனத் தலைமையே நமக்குப் பலிக்கும்.

☆ மோட்சம் என்பது பிரம்மத்தை, பரம்பொருளையடைவது, அப்படி அடைந்தவர் ஏராளம்.

☆ அது சாட்சி புருஷனாகும். முழு பிரம்மமாகாது,

பகவான் கூறுவது முழுமையான பிரம்மம்.

☆ ஞானயோகம் மனத்தால் செய்யப்படுவது, மோட்சம் பெறுவது.

☆ நம் உருவம் கண்ணாடி, போட்டோ, வீடியோவில் தெரிகிறது. கண்ணாடியில் இட-வல மாற்றமாகத் தெரிகிறது. போட்டோவில் மாற்றமின்றி அசைவின்றித் தெரிகிறது. வீடியோவில் அசைவோடு தெரிகிறது. எதுவும் நாமில்லை. நமது பிரதிபலிப்பு.

☆ **மனம் பிரம்மத்தை ஒரு கருத்தாக அறியும்**.

☆ உடல் பிரம்மத்தைச் சிலையாக அறியும்.

☆ உணர்ச்சி பிரம்மத்தை நெகிழ்ந்த பக்தியாக அறியும்.

☆ மனத்தின் ஆதி சத்தியஜீவியம். அது ஜீவியத்திலிருந்து எழுகிறது.

ஜீவன் ஜீவியத்தை எழுப்புகிறது. ஜீவனின் மூலம் பரம்பொருள் என்ற பிரம்மம்.

☆ உடல் விக்ரஹத்தை வழிபடுவது, நெகிழ்ந்த பக்தியால்,

உணர்ச்சியையடைந்து, மனத்தை அடைய பரம்பொருளை ஒரு



கருத்தாகக் காண வேண்டும். சத்தியஜீவியம் பரம்பொருளைப் பிரபஞ்ச ஜீவியமாகக் கருதுவதால், பிரபஞ்ச ஜீவியம் பரம்பொருளை அடைய உதவும்.

☆ தாலுக்காபீஸ் கிளார்க் தாசில்தார் உத்தரவை டைப் செய்கிறார். அவர் தாசில்தாராக வேண்டுமானால், உத்தரவு பிறப்பிக்கும் ஆபீசராக வேண்டும். தாசில்தார் கலெக்டராக வேண்டுமானால், உத்தரவு தாலுக்காவிலிருந்து, ஜில்லா உத்தரவாக வேண்டும்.

***செயலுக்குத் தகுந்த நிலை.***

***நிலைக்குத் தகுந்த செயல்.***

***நிலை உயர அதிகாரம் உயர்ந்து செயல் உயர வேண்டும்.***

☆ பிரம்மம், பரம்பொருள், கடவுள், இறைவன் என்பன எல்லா நிலைகளிலுமிருப்பதால், நிலைக்கேற்ப முறையும், பலனும் அமையும்.

☆ மனம் கருத்தைச் சிந்திப்பது. அதனால் பரம்பொருள் கருத்தாகத் தெரிகிறது.

☆ இப்படி உயர்வது ரிஷிகட்கே எளிதானதில்லை என்றாலும், இப்படியும் உயரும் வழியுள்ளது என்பதைச் செய்தி குறிப்பிடு-கிறது.

☆ நடைமுறை கடினமானாலும், இதுவரை உலகில் நடக்காதது இல்லை.

29 வயது ராணுவ அதிகாரி நெப்போலியன் சக்ரவர்த்தியானது சரித்திரம்.

☆ அன்று அரிபொருளாய் நடந்த பல, இன்று பரவலாக நடப்பதைப் போல் இதுவும் பரவலாக நடக்கும் வாய்ப்புண்டு.

○ ○ ○

**II/3) நம் கரணங்கள் பதப்படுத்தப்பட்டவை.**

**ஒரு பழக்கத்தாலோ, திறனாலோ, அவை செயல்படு-கின்றன.**

**பழக்கத்தை விட்டால், திறனைக் கடந்து வந்தால், கரணத்தின் முழுமையால் செயல்பட முடியும்.**

**மனிதன் பரம்பொருளை வெளிப்படுத்த அது போன்ற விழிப்பு தேவை.**

**மனிதனின் பிரம்ம விழிப்பு பரம்பொருளை வெளிப்படுத்தும்.**

☆ அன்னை புதியதாக வருபவர்களைக் காணும்பொழுது ஆன்மீக விழிப்பு இருக்கிறதா என கவனிப்பார்கள்.

☆ ஒருவருக்கு அது இருந்தால், அவரை ஆசிரமத்தில் சேரும்படிச் சொல்வார்கள்.

☆ அவர் சேர விரும்பினால், உடனே சேர்த்துக் கொள்வார்கள்.

☆ ஆன்மீக விழிப்பற்றவர் சேர விரும்பினால், ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

உன் சேவை நீயிருக்குமிடத்திலேயே இருந்து செய்ய வேண்டியது என்பார்கள்.

☆ ஆன்ம விழிப்பில் பல கட்டங்களுண்டு.

☆ ஆன்ம விழிப்பு சிறப்பாக இருந்தால்

''நான் உனக்காக காத்துக் கொண்டிருக்கிறேன்.

உனக்காக எவ்வளவு நாள் நான் காத்துக் கொண்டிருக்கிறேன் என உனக்குத் தெரியாது'' என்று கூறுவதுண்டு.

☆ பூர்வ ஜென்மத்தில் அன்னையுடன் தொடர்புள்ளவர் வருவது வழக்கம்.

☆ சிலர் தங்கப் பிரியப்படுவார்கள்.

☆ சிலர் அன்னை அழைப்பை மறுத்துவிடுவார்கள்.

☆ ஒரு பேங்க் ஏஜெண்ட் மனைவி, குழந்தைகளுடன் வந்தார்.

☆ அன்னையை தரிசித்தபொழுது அவர் மகன் அன்னையிடம் தாவிப் போனான்.



☆ அவர்கள் போனபின் அன்னை குழந்தை போட்டோவைக் கேட்டார்.

☆ போட்டோவை சோதனை செய்து

''இந்தக் குழந்தை ஆசிரமத்திலிருந்த சாதகர்.

இவர் தகப்பனாரையும், தாயாரையும் ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்கிறேன்'' என்றார்.

☆ ஆன்ம விழிப்பு சூட்சும விழிப்பாக இருக்கும்.

☆ ஆன்மாவே விழித்து வெளிவருவது சூட்சும விழிப்பைவிட உயர்ந்தது.

☆ அப்படிப்பட்டவர் என் மூலம் அன்பரானவர்கள் சிலர்.

அவர்கள் அனுபவம் சிறப்பானது.

அவர்களது உடல் விட்டு உயிர் பிரிந்து வெளியில் போய் திரும்பி வரும்.

உயிர் மேலே சென்று அவர் உடல் கீழேயிருப்பதைக் காணும்.

உயிரற்ற ஜடப்பொருள்கள் அவருடன் சில சமயம் பேசும்.

அன்பர் தினமும் பிரயாணம் செய்யும் பாதை அவருக்கு ஒளிமயமாய்த் தெரியும்.

பகவான் ஸ்ரீ அரவிந்தர், அன்னை ஆகாயத்தில் கோபுரம் போல் உயர்ந்து தோன்றுவர்.

நஷ்டமடையும் பெரிய சர்க்கார் நிறுவனத்தின் மீது அது போன்று தெரிந்தால், அந்த ஸ்தாபனம் மாறி இலாபகரமாகும்.

சில மைல்களுக்கப்பால் நடப்பவர் உருவம் தெரியும்.

ரயில் முன் ஸ்டேஷனை விட்டுப் புறப்படுவது கேட்கும், தெரியும்.

பொன்னிறமாக பகவான் வேலை செய்யுமிடத்தில் காட்சி தருவார்.

போட்டோவிலிருந்து உயிரோடு அன்னை வெளி வருவார்கள்.

*The Life Divine*யைப் பிரித்தால் பகவான் தெரிவார்.

அடுத்தவர் நினைப்பது தெரியும்.

☆ இப்படிப்பட்டவர்க்கு யோகம் பலிக்கும்.

ooo

## II/4) பிரபஞ்சத்தைச் சத்தியஜீவியம் நிர்ணயிக்கின்றது.

**நம் வாழ்வை அகந்தை நிர்ணயிக்கிறது.**

**சத்தியஜீவிய செயலைக் காண இன்று நம்மை நிர்ண-யிக்கும் அகந்தையை அழித்து சைத்தியப் புருஷனால் நாம் ஆளப்பட வேண்டும்.**

**அற்புதம் புலப்பட அனந்தனை வாழ்வில் காண வேண்டும்.**

☆ சட்டம், நியாயம், தர்மம், இலட்சியம் என சமூகம் பலவற்றைக் கருதுகிறது.

☆ சூது விளையாடக்கூடாது என சட்டம் இன்று வரையில்லை.

☆ தரும புத்திரர் சட்டப்படி ராஜ்யத்தையும், தம்பிகளையும், தன்னையும், மனைவியையும் இழந்தார்.

☆ திரௌபதி சட்டப்படி துகிலுரியப்பட்டாள்.

☆ இன்றைய நிலையில் உலகில் எங்கும் அது நடக்காது.

☆ சட்டம் காலத்தால் அமைந்தது.

☆ பூனாவில் ஒரு தகப்பனார் கோர்ட்டில் என் மகன் என்னைக் கவனிக்கவில்லை என வழக்கு தொடுத்தார்.

☆ கோர்ட்டார் அனுதாபம் தெரிவித்தனர். மகன் கடமையை நிறைவேற்ற சட்டம் உதவாது என்றனர்.

☆ இன்று விவாகரத்தைக் கோர்ட் அங்கீகாரம் செய்கிறது, மறுத்த கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ உத்தரவு பிறப்பிக்கிறது.

**கணவன் அன்பு செலுத்த சட்டம் போட முடியுமா?**

☆ மனிதன் சொத்துரிமை பெற்றிருக்கிறான்.

☆ சொத்து நியாயத்திற்கும், அன்பிற்கும் தடை.

☆ அன்பான குடும்பம் எழ சட்டம் இயற்ற முடியாது.



☆ நண்பர்கள் காரணமின்றிப் பிரிகின்றனர். காரணத்துடனும் பிரிகின்றனர்.

இதைத் தடுக்க சட்டம், நியாயம், தர்மம், இலட்சியம் இன்று உலகிலில்லை.

☆ ஏசு கிருஸ்துவை சிலுவையில் அறைந்தனர்.

☆ மதம் மாறச் சொல்லிக் கொடுமைப்படுத்தினர்.

☆ இந்துக்களும், முஸ்லீம்களும் கிராமம் கிராமமாக ஆயிரக்-கணக்கானவரைக் கொலை செய்தனர்.

☆ உலகில் அன்பிற்குச் சட்டத்தின் பவரிருந்தால் இவற்றைத் தடுக்கலாம்.

இன்று இல்லை.

☆ அகந்தையிருப்பதால் போட்டி, பொறாமை, பூசல், பிணக்கு, போர் எழுகிறது.

☆ அகந்தை அழிய ஏதாவது செய்ய முடியுமா?

☆ லாட்டரியில் இலட்சம், கோடி பெற்றவர் அப்பணத்தால் நல்ல வாழ்வு வாழ்வது அரிது. இல்லையெனவும் கூறுகிறார்கள். நாம் இதெல்லாம் தலைவிதி, உள்ளதுதான் நிலைக்கும் என மனத்தைத் தேற்றிக்கொள்கிறோம்.

☆ திவாலானவர், மனம் உடைந்தவர், நிர்க்கதியானவர், நடுத்தெருவுக்கு வந்தவர் அன்னையிடம் வந்து நல்வாழ்வு வாழ்வது ஏராளம். இன்றைய வாழ்வு அவர்கட்கு அற்புதமாகத் தெரிகிறதா எனத் தெரியவில்லை. **'நான் அன்னையிடம் வந்திராவிட்டால் நானிருந்த இடம் மண்ணாகி, மக்கி, புல் முளைந்திருக்கும்' எனக் கூறியவர் ஆயிரம்**.

☆ துரோகம் செய்யத் துடிப்பது மனித சுபாவம். சாது எனப் பெயர் வாங்கிய கணவனை, ஒரு நாளாவது உன்னை ஜெயிலில் நான் பார்க்க வேண்டும் எனக் கத்திய மனைவி கோர்ட்டில் ஜட்ஜ் காதுபட அப்படிப் பேசிவிட்டாள். விவாகரத்தை அதுவரை மறுத்த கோர்ட் அன்று ஏற்று மனைவியைக் கணவனிடமிருந்து பிரித்துவிட்டது.

☆ அகந்தையை மனிதனே முன்வந்து அழிக்க வேண்டும்.

☆ சுபாவத்தை அவனே மாற்ற முயல வேண்டும்.

☆ அது நடந்தால், மனிதன் அவற்றை விழைந்தால், அனந்தனை வாழ்வில் காணலாம். அற்புதம் அன்றாட நிகழ்ச்சியாகும்.

○ ○ ○

**II/5) விவேகம் என்பது எல்லோரும் அறிந்ததை நம் அனுபவத்தில் காண்பது பல சமயம் அமையும். சாதாரண மனிதன் யோசனை இல்லாமல் பெரிய விஷயங்களைப் பேசுவதுண்டு. அவனுக்கு அது பழமொழி.**

**அறிவாளிக்கு உலகத்து விவேகம், அறிவுக்குரிய கருத்து, யோகி அதை ஆன்மீக உண்மையாகக் கருதுகிறார். எவரும் அனந்தனின் செயலை அங்குக் காண்பதில்லை. எல்லோரும் அறிந்த எளிய உண்மையாகக் காணும் விவேகம் நடக்கக்கூடியதற்கும் நடப்பதற்கும் இடையே-யுள்ள சூட்சும நிர்ப்பந்தத்தை அறிகிறது.**

- **உலகம் அறிந்ததை உன் அனுபவத்தில் உணர்வது விவேகம்.**
- **காதில் விழுந்தது கருத்தில் படுவது விவேகம்.**

☆ **உச்சக்கட்ட உயர்வுள்ள பெருநெறிகள் எல்லோரும் நெடுநாளாக அறிந்த எளிய உண்மைகள் என நாமறிவோம்.**

☆ பொய் சொல்லக்கூடாது என்பதை அறியாத சிறு குழந்தையு-மில்லை.

☆ அதைப் பின்பற்றியவர் அரிச்சந்திரனும், இந்தக் காலத்தில் காந்திஜியுமாவர்.

☆ வாழ்க்கையில் பொய் சொல்லாதவன் வழக்கு என வந்தால் பொய் சொல்லுவான்.

☆ உண்மையைச் சொன்னால் உள்ளதும் போய்விடும் எனில் பொய்யே சொல்லாதவனும் பொய் சொல்லுவான்.



☆ தருமபுத்திரர் பொய் சொல்வதில்லை. கிருஷ்ண பரமாத்மாவால் சொன்னார்.

☆ இந்த விஷயம் மனைவிக்குத் தெரிந்தால் உடனே என்னை விட்டுப் போய்விடுவாள் எனில் எவரும் அந்த இடத்தில் உண்மை சொல்லமாட்டார்கள்.

☆ 5-45க்கு வந்தேன் என்பதை 6 மணி என்றால் அது பொய் என நாம் கருதுவதில்லை.

☆ சொல்லக் கூச்சப்படும் விஷயங்களில் கூச்சத்தைத் தவிர்ப்பதற்காகப் பொய் சொல்வதுண்டு.

☆ **பொய் சொல்வது ருசிக்கிறது, பிறர் அதை நம்புகிறார்கள், அது எனக்கு வெற்றி எனப் பொய் சொல்வது பாவம், பாதகம்.**

☆ பொய் சொல்லக்கூடாது என்பது தெரியுமென்றாலும், சிறு பொய் பெரிய பாதகம், ஆத்ம துரோகம் என அறியும் சந்தர்ப்பம் வாழ்வில் பலருக்கு வருவதில்லை.

☆ சிறிய பொய்யும் சில முக்கிய நேரத்தில் நம்மை அம்பலப்படுத்தும் எனப் பலரும் அறியார்.

☆ ஐரோப்பிய நாடுகளில் அரசனைப் பிரபு எனக் கருதினார்கள்.

☆ அனைவருக்கும் அரசன் போலிருக்க ஆசை.

☆ பொய் சொன்னால் அரச பதவிக்கு அவமானம்.

☆ அதனால் அரசன் பொய் சொல்லமாட்டான் என்பது நம்பிக்கை.

☆ அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழியென உயர்குடி மக்களிடம் பொய் காணப்படுவதில்லை.

☆ ஒரு பொய் சொல்லாவிட்டால் பெரிய ஜமீன் சொத்து போய்விடும் என்ற நிலையில் ஒரு ஜமீன்தார் மெய் சொன்னது ஆங்கில ஜட்ஜுக்கு ஆச்சரியமாயிருந்தது.

☆ ‘நான் இந்தியா முழுவதும் பிரயாணம் செய்து பல்வேறு வகையான மக்களைச் சந்தித்திருக்கிறேன். எவரும் பொய் சொல்ல நான் கேட்டதில்லை’ என மெக்காலே 150 ஆண்டுக்கு முன் இந்தியாவைப் பற்றிக் கூறினார்.

☆ சாதாரண மனிதன் 30 நாள் எந்தச் சிறிய பொய்யும் கூறுவதில்லை என முடிவு செய்தால் அவருக்கு,

- தியானம் அடுத்த கட்டத்தில் பலிக்கும்.
- செய்யும் காரியங்கள் பெருவாரியாகக் கூடிவரும்.
- மனம் ஆழ்ந்த சிறந்த நிம்மதியடையும்.
- பெரும் அளவு நண்பர்களும் உறவினர்களும் தூரப் போவார்கள்.
- **மெய்யின் ஆன்மீகப் பெருமை தெரியும்**.
- காந்திஜியின் பெருமையைப் பல மடங்கு அதிகமாக உணர்வர்.
- சிறு குழந்தைகள் அவரை விரும்பி நாடுவர்.
- பொய் சொன்னதால் தடைப்பட்ட காரியங்கள் தானே கூடிவரும்.
- **அன்னை நினைவு தானே உள்ளிருந்து ஓரளவு எழும்**.
- மனைவி உயர்ந்தவளானால் நெருங்கி வருவார்,
  தாழ்ந்தவரானால் அந்த ஒரு மாதமும் பார்க்க முடியாது.
- வம்பர், வழக்கர், வலிய சண்டைக்கு வருவர்.
- மனத்தில் படிந்த திரை விலகியது தெரியும்.
- சாவித்திரி, *The Life Divine*இல் புரியாத பகுதிகள் புரியும்.
- ஒரு மாதத்திற்குப் பின் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப மனம் கூசும்.
- அப்படித் திரும்பினால் வாழ்க்கை ஜீவனற்றிருக்கும்.

*தொடரும்....*

❀ ❀ ❀

### ஜீவிய மணி

**செய்வதை சொல்லால் மறுப்பது நயத்தக்க நாகரீகம்.**



## அன்பர் கடிதம்

ஐயா,

கடந்த மாத வாக்கில், எனது வங்கி பணியில், எனது கவன குறைவு காரணமாக ஓர் தவறு ஏற்பட்டது. உரியவருக்கு சேர வேண்டிய ஓர் பெரும் தொகை, மற்றொருவர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிட்டது. அத்தொகை எவ்வித சிரமமும் இன்றி கிடைக்க அன்னையிடம் வேண்டிக்கொள்ளுமாறு தங்களுக்கு கடிதம் எழுதினேன். அதற்கு தங்களிடம் இருந்து பதிலும் வந்தது. நமது பிரார்த்தனையின் பலனாக அன்னையின் அருளினால் அத்தொகை ஓர் பைசா இழப்பின்றி திரும்பி வந்து உரியவரிடமும் சேர்க்கப்பட்டுவிட்டது. எனது நன்றியை அன்னையிடம் சமர்ப்பிக்க வேண்டி ஓர் சிறு தொகையை காணிக்கையாக அன்னையின் திருபாதத்தில் சமர்ப்பிக்கிறேன்.

*-- N. தனக்கோடி, அம்மாசத்திரம்*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆசையைத் திருவுருமாற்ற சிறந்த நேரம் அடக்க முடியாத ஆசை பீறிட்டெழும் இளமையாகும்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஸ்ரீ அரவிந்தர் எழுதியவை, சிருஷ்டியைத் தழுவியவை. அந்த அளவு விசாலமான புத்திக்கே விளங்கும்.

***சிருஷ்டியைத் தேடுபவர்க்கு ஸ்ரீ அரவிந்தம் புரியும்.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XX. Death, Desire, and Incapacity

Our Mind is conscious. Page No.195
Hunger is still only a vital hunger. Para No.11
It transforms itself into higher forms.
There is hunger in the vital parts.
It becomes craving of Desire in the mentalised life.
It is straining of Will in the intellectual or thinking life.
This movement of desire must continue.
It must continue until the individual has grown sufficiently.
So that he can now at last become master of himself.
The union with the Infinite increases.
It is the Infinite possessor of the universe.
Desire is the lever.
The divine Life-principle effects its end by the desire.
It is the end of self-affirmation in the universe.
There is an attempt to extinguish it.
It is done in the interests of inertia.
It is a denial of the Life-principle.
It is a Will-not-to-be.



## 20. மரணம், ஆசை, இயலாமை

மனம் தன்னையறியும்.
பசி உயிரின் பசி.
பசி அதன் உயர்ந்த உருவமாக மாறுகிறது.
உயிரில் பசியுண்டு.
அது மனவாழ்வில் ஆசையின் வேகமாகிறது.
சிந்திக்கும் அறிவுடை வாழ்வில் அது சிந்தனையின் சிறப்பாகிறது.
இந்த ஆசையின் சலனம் தொடர வேண்டும்.
மனிதன் போதுமான அளவுக்கு வளரும் வரை இது தொடரும்.
முடிவாக அவன் தனக்கு அதிபதியாகும்வரை இது தொடர வேண்டும்.
அனந்தத்துடன் ஐக்கியமாவது வளர்கிறது.
அது பிரபஞ்சத்தை அனந்தமாகத் தன்னுட்கொண்டது.
ஆசை தூண்டுகோல்.
தெய்வீக வாழ்வின் சட்டம் ஆசை மூலம் சாதிக்கிறது.
பிரபஞ்சத்தில் தன்னை வற்புறுத்தும் முடிவு அது.
அதை அழிக்க முயலலாம்.
தமஸை காப்பாற்ற அதைச் செய்கிறார்கள்.
வாழ்வின் சட்டத்தை மறுக்கும் செயல் அது.
அது இல்லாத உறுதி.

It is necessarily ignorance.
One cannot cease to be individually except by being infinitely.
It has to progress in the meanwhile.
It begins from a mutually devouring hunger.
It moves to the type of a mutual giving.
It is an increasingly joyous sacrifice of interchange.
The individual gives himself to other individuals.
And receives them back in exchange.
The lower gives itself to the higher.
The higher gives itself to the lower.
They are fulfilled in each other.
The human gives itself to the Divine.
The Divine gives itself to the human.
The All in the individual gives itself to the All in the universe.

And receives its realised universality.
It is a divine recompense.
There is the Law of Hunger.
There is the Law of Love.
One should give place to the other.
The Law of Division must give place to the law of Unity.
The law of Death to the law of immortality.
Such is the necessity.
Such is the justification.
Such is the culmination and self-fulfilment of the Desire.
It is at work at the universe.

Life assumes this mark of Death. Page No.195
The finite seeks to affirm its immortality. Para No.12
Desire is the impulse of the Force of Being.



அது அவசியமாக அஞ்ஞானமாகும்.
அனந்தமாக இல்லாமல் மனிதனாக இருக்க முடியாது.
இதற்கிடையில் அது முன்னேற வேண்டும்.
ஒருவரையொருவர் விழுங்கும் பசியாக அது ஆரம்பிக்கிறது.
ஒருவருக்கொருவர் கொடுப்பதாக முடிகிறது.
வளரும் ஆனந்த தியாகமான பரிமாறுதல் அது.
மனிதர்கள் மற்ற மனிதர்கட்குக் கொடுக்கிறார்கள்.
கொடுத்ததைப் பிரதிபலனாகப் பெறுகின்றனர்.
சிறியது பெரியதற்கு கொடுக்கிறது.
பெரியது சிறியதற்குத் தன்னையளிக்கும்.
ஒன்றையொன்று பூர்த்தி செய்து கொள்கிறது.
மனிதன் இறைவனுக்குத் தன்னை அர்ப்பணிக்கிறான்.
தெய்வம் மனிதனுக்குத் தன்னை அர்ப்பணிக்கிறது.
தனி மனிதனில் உள்ள எல்லாம் பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றிற்கும் தன்னை அர்ப்பணிக்கிறது.
அப்படிப் பூர்த்தியான பிரபஞ்சத்தை ஏற்கிறது.
அது தெய்வம் தரும் பிரதிபலன்.
பசியின் சட்டமுள்ளது.
அன்பின் சட்டமுள்ளது.
ஒன்று அடுத்ததற்கு இடம் தர வேண்டும்.
பிரிவினைச் சட்டம் ஐக்கியத்தின் சட்டத்தை ஏற்க வேண்டும்.
மரணம் நித்தியத்தை ஏற்க வேண்டும்.
அவசியம் அத்தன்மையொத்தது.
இவ்வழி அவை சரியென ஏற்கப்படுகின்றன.
ஆசையின் முடிவு, அது பூர்த்தியாவதும் இப்படி.
இது பிரபஞ்சத்தில் செயல்படுகிறது.

வாழ்வு மரணம் என்ற முகமூடியைப் போட்டுள்ளது.
சிறியது அதன் நித்தியத்தை வற்புறுத்துகிறது.
ஆசை ஜீவனின் சக்தியுடைய வேகம்.

It is individualised in Life.
It affirms progressively.
It does so in terms of succession in Time.
And of self-extension in Space.
It does so in the framework of the finite.
Also in its infinite Bliss.
It is the Ananda of Sachchidananda.
That impulse assumes a mark of Desire.
It comes directly from the third phenomenon of Life.
It is its law of incapacity.
Life is an infinite Force.
It is working in terms of the finite inevitably.

Its overt individualised action is in the finite.
Its omnipotence must appear.
Behind every act of the individual there is something.
It is the whole superconscious and subconscious presence.
It is of the infinite omnipotent Force.
It is there behind it however weak, however stumbling, however futile.
Without that presence behind it no least single movement in the cosmos can happen.
Supermind is inherent in things.
There is the omnipresent omniscient force.
There is the sum of universal action.
Each act and movement falls by a fiat.
That fiat works as the Supermind.
But there is the individualised life force.
This force is limited to its consciousness.
It is full of incapacity.



அது வாழ்வில் தனி மனிதனுக்குரியதாகிறது.
கொஞ்சம் கொஞ்சமாக அது வலியுறுத்துகிறது.
காலத்தில் தொடர் நிகழ்ச்சியாக அது செயல்படுகிறது.
பிரம்ம வெளிப்பாடான இடத்திலும் செயல்படுகிறது.
சிறியதின் கட்டுக்கோப்புக்குள் அது செயல்படுகிறது.
அனந்தமான ஆனந்தத்தின் எல்லைக்குள் செயல்படுகிறது.
அது சச்சிதானந்தத்தின் ஆனந்தம்.
ஆசையெனும் முகமூடியை அது தரிக்கிறது.
வாழ்வின் மூன்றாம் அம்சத்திலிருந்து அது நேரடியாக எழுகிறது.
அது இயலாமை என்ற சட்டம்.
வாழ்வு அனந்தமான சக்தி.
சிறியதன் கணக்குக்குள் அது செயல்படுகிறது, இது தவிர்க்க முடியாதது.
வெளிப்படையான தனித்த செயல் கண்டத்தில் வெளிப்படுகிறது.
அதன் எல்லாம் வல்லமை தெரிய வேண்டும்.
தனி நபர் செயலுக்குப்பின் ஒன்றுளது.
அது பாதாளமும், பரமாத்மாவும் சேர்ந்தது.
அது அனந்தமான எல்லாம் வல்ல சக்தி.
எவ்வளவு வலிமையற்றதானாலும், பயனற்றதானாலும், தடுமாறுவதானாலும் அது உண்டு.
பின்னணியில் அந்தச் சக்தியின்றி பிரபஞ்சத்தில் எந்த ஒரு சலனமும் ஏற்பட முடியாது.
பொருள்களில் சத்தியஜீவியம் பிறப்பிலேயே இயல்பாக இருக்கிறது.
எல்லாம் வல்ல எல்லாம் அறிந்தது சக்தியாக வேலை செய்கிறது.
பிரபஞ்ச செயல்களின் தொகுதியுண்டு.
ஒவ்வொரு செயலும் சலனமும் அதனால் விழுகிறது.
அந்தச் சக்தி சத்தியஜீவியம்.
தனிப்பட்டதாக எழும் வாழ்வின் சக்தியுள்ளது.
இந்தச் சக்தி தன் ஜீவியத்துள் மட்டும் வேலை செய்கிறது.
இதன் இயலாமை முழுமையானது.

It has to work against two things.
One is the mass of other environing individualised life forces.
It is subject to control and denial by the infinite Life itself.

It has a total will.
It has its own will and trend.
They may not immediately agree.
Limitation of force is there.
There is phenomenon of incapacity.
Therefore this is the third characteristic.
It is the characteristic of individualised divided life.
On the other hand, there are other things.
There is the impulse of self-enlargement.
The impulse of all possession remains.
It does not or is not meant to measure things.
It does not limit itself by the limit of its present capacity.

Hence a gulf arises.
It is between the impulse to possess and the force of possession.
Desire arises in it.
Such discrepancy may not be there.
The force may always take possession of its object.
Always attain securely its end.
Then desire would not come into existence.
There would be only a calm self possessed will.
Without craving, such as the will of the Divine.

*Contd….*

❀ ❀ ❀



அது இரு சக்திகளை எதிர்த்து வேலை செய்கிறது.
தனிப்பட்ட வாழ்வின் சக்திகளின் தொகுப்பு ஒன்று.
அனந்தமான வாழ்வின் கட்டுப்பாட்டிற்கும், மறுப்புக்கும் அது உட்பட்டது.

அதற்கு மொத்தமான உறுதியுண்டு.
அதற்கென்று சொந்தமான உறுதியுண்டு.
அவை உடனே ஒத்துக்கொள்ள மறுக்கும்.
சக்திக்கு அளவுண்டு.
இயலாமை என்ற விஷயம் உண்டு.
அதனால் இது மூன்றாம் அம்சம்.
தனிப்பட்ட பிரிக்கப்பட்ட வாழ்வின் மூன்று அம்சங்கள் இவை.
மறுபக்கம் மற்றவையுள்ளன.
தான் பெருகும் வேகம் உண்டு.
அனைத்தையும் தன்னுட்கொள்ளும் வேகமும் உண்டு.
அது பொருள்களை அளப்பதில்லை, அதற்காக ஏற்பட்டதில்லை.
தன்னை அளவுக்குட்படுத்திக் கொள்வதில்லை, தன் இன்றைய திறமையால் செய்வதில்லை.

எனவே ஒரு இடைவெளி எழுகிறது.
ஆட்கொள்ளும் சக்திக்கும் அதன் வேகத்திற்கும் இடைப்பட்டது அது.
அதை ஆசை எழுப்புகிறது.
அப்படிப்பட்ட வேறுபாடுகள் இல்லாமலிருக்கலாம்.
சக்தி தன் பொருளை எப்பொழுதும் எடுத்துக் கொள்ளும்.
அதன் குறிக்கோளை எப்பொழுதும் உறுதியாய் அடையும்.
அப்படியானால் ஆசை எழாது.
நிதானமான தன் சக்தியைத் தன்னுட்கொண்ட உறுதி மட்டுமிருக்கும்.
திருவுள்ளம் போல் அதற்குப் பெறும் வேகமிருக்காது.

*தொடரும்....*

❀ ❀ ❀

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 40. கேட்பதைவிட அதிகமாகப் பெறுவது

1970இல் ஒரு அன்பர் சேவை, பாங்கிற்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது. அது கிராம சேவை. சுமார் 10 ஆண்டுகளாக அவ்வன்பர் அந்த சேவைக்கான சந்தர்ப்பம் வேண்டுமென அவரால் முடிந்த எல்லா முயற்சிகளையும் செய்கிறார். அந்தச் சேவையை அவர் புனிதமாகக் கருதினார். அவர் மனம் அன்றிருந்த நிலையை சொல்ல வேண்டுமானால் மக்கள் இவர் சேவையைப் பெறுவதற்கு சன்மானம் கொடுக்கும் மனநிலை அவருடையது. எந்த பாங்க்கும் கிராம சேவையை ஏற்காத நேரம். கிராமத்தைப் பற்றி பாங்கில் பேச முடியாது. பேசினால் கேலி செய்வார்கள். எந்தப் பாங்க்காவது அந்த சேவையை மேற்கொண்டால் இந்த அன்பர் பாங்கிற்கு சேவை செய்யக் காத்திருக்கிறார். அந்தக் கிராமத்தில் அவர் பயிரிடும் நிலங்களில் அவருக்கு உரிமையில்லை. சேவை செய்யும் உரிமையுண்டு. 60 ஏக்கர் வாழை பயிரிட நினைத்தார். நிலத்திற்கு முதலாளிக்குப் பயிரில் நாட்டமில்லை. அன்பர் உரிமையற்ற சேவையை மேற்கொண்டவர். அதனால் அவரிடம் பணமில்லை. கடன் வாங்கும் வசதியில்லை. **நம் முயற்சியை முழுவதும் முடித்துவிட்டால் அன்னை செயல்படுவார் என்ற நம்பிக்கையில் செயல்பட்டு வருகிறார்**. ஒரு ஏக்கர் வாழை பயிரிட அன்று 1,000 ரூபாயாகும். அவரிடம் அதுவுமில்லை. 60 ஏக்கர் பயிரிட்டால்தான் அங்குள்ள வசதிகள் முழுவதும் செலவாகும். அந்த இலட்சியத்திற்காக ½ ஏக்கர் வாழையை 15 நாளில் பகீரதப் பிரயத்தனம் செய்து முடித்தார். அது வசதியிருந்தால் 1 நாள் வேலை. பாங்க் ஆபீசர்கட்கு அன்பரின் நிலை - பணம், உரிமை - சரிவரத் தெரியாது. சேவைக்கு அவர் மனநிலையையும் அவர்கள் அறியவில்லை. கிராமத்தில் பணம் வசூல் செய்ய அன்பர் உதவி தேவையென அவர்கள் நினைத்ததால் 60 ஏக்கர் வாழை பயிரிட ரூ. 45,000 பாங்க் கடன் தர முன்வந்தனர்.



அன்பருக்குச் சொத்தில் கடன் பெறும் உரிமையில்லை என்பதால் அவர் ஏற்கவில்லை. அவருடைய உதவி அவசியம் தேவை என்பதால் 45 ஆயிரத்தை 60 ஆயிரமாகக் கொடுக்க முடிவு செய்தனர். அன்பர் ஏற்கவில்லை. 85,000மாக உயர்த்தினர். எப்படி அன்பரால் ஏற்க முடியும்?

அவருக்கு மேலேயுள்ளவரிடம் சென்று "சிபார்சு" செய்யும்படிக் கேட்டனர். அவரே கையெழுத்துப் போட வேண்டியவர் என்பதால் அவர் ஏற்றார். இப்பொழுது அன்பர் விண்ணப்பம் தர வேண்டும். நாங்கள் 85,000 ரூபாய் கொடுக்க முடிவு செய்துவிட்டோம். நீங்கள் 1,20,000க்கு விண்ணப்பித்தால் 85,000 சாங்ஷன் செய்கிறோம். 85,000 விண்ணப்பித்து 85,000 சாங்ஷன் செய்தால் ஆடிட்டிங்கில் கேள்வி வரும் என்றனர்.

***பாங்க் முன்வந்து வலிய விரும்பி 45இல் ஆரம்பித்து 60க்குப் போய் 85 கொடுப்பதானாலும் கேட்டதைக் கொடுக்க "வழக்கில்லை". குறைத்தே கொடுக்கும் உலகமிது.***

இந்த உலகில் 1930இல் ஒரு சாதகர் எழுதிய கட்டுரை மிக அற்புதமாக இருப்பதால் பகவான் தன் கையெழுத்தில் எழுதினார். அதனால் அது பகவான் எழுதியதாகக் கருதப்பட்டு வருகிறது. அதில் ஒரு வரி

***நான் அறியாமல் கேட்டதைவிட அதிகமாகக் கொடுத்த தெய்வம் அன்னை.***

இது அருளல்ல, பேரருள். பாலிடெக்னிக்கில் சேரப் போனவன் இன்ஜினீயரில் முடித்ததும், கேட்டதைப் போல் 2 மடங்கு பெற்றதும், செய்த வேலை 24 மடங்கு பெருகியதும், 300 மடங்கு விரிவடைந்ததும், புன்செய் பயிர் செய்யப் போன இடத்தில் நன்செய் பயிர் அமைவதும், ரூ. 3000 சம்பளம் சுருங்கி 800 ரூபாயாக வீட்டிற்கு வந்த பணம் 8 ஆண்டில் 11,000 ரூபாயானதும் **அதுவும் ஓய்வு பெற்றபின் பேரருளாகும்**.

***அது - அதிகமாகப் பெறுவது - பேரருளின் முத்திரை.***

*தொடரும்.....*

❀ ❀ ❀

# அன்னை வாழ்வு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

வீட்டுப் படி இறங்கியதும் வீடு மறந்துவிட்டது. அலுவலகப் படி ஏறியதும் உலகம் மறந்துவிட்டது. பூரணமாகத் தன் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் இயல்பு அவளுக்கு. எல்லோரும் மதியம் ஒரு மணியை எதிர்பார்த்து சாப்பாட்டு இடைவேளைக்கு எழுந்து போய்விடும்போது, கையில் உள்ளதை முடிக்காமல் எழுந்திருக்க-மாட்டாள். ஒரே பெண் அலுவலர் என்பதால் தனியே சாப்பிடுவாள். அவள் அரட்டை அடிக்கவோ, ஓய்வெடுக்கவோமாட்டாள். சாப்பிட்டதும் கைப்பையில் வைத்திருக்கும் தெய்வீகப் புத்தகம் ஒன்றை எடுத்து சில வரிகளைப் படித்துவிட்டு புது உற்சாகத்துடன் மீண்டும் பணியில் ஈடுபடுவாள். அன்று அவள் சாப்பிட எழுந்தபோது மணி 2.20. எல்லோரும் சாப்பிட்டு, அரட்டையடித்து முடித்து சீட்டுக்குத் திரும்பிவிட்டனர். அவள் அப்போதுதான் ரூமை சார்த்திவிட்டு டிபன் பாக்ஸுடன் ஓய்வறைக்குப் போனாள்.

அப்போதுதான் முதலாளி உள்ளே நுழைந்தார். இப்போது அவள் ஏதேனும் மாட்டிக்கொள்ளமாட்டாளா என்று எல்லோர்க்கும் சுவாரஸ்யமான எதிர்பார்ப்பு. அவள் உயர்வு பொறுக்க முடியாத சில உள்ளங்களும் அங்கிருந்தன. பொறாமையைப் போல் தீயது உண்டா உலகில்? அவர்கள் ஆசைப்பட்டதுபோல், பியூன் அவளைத் தேடி வந்தான். அறை சார்த்தப்பட்டிருந்தது. முதலாளி வரும் முன் அவளுக்குத் தனி அறையோ, தனி கம்ப்யூட்டரோ கிடையாது. அறை சார்த்தி இருப்பதைப் பார்த்து பக்கத்து சீட்காரரிடம், "இவங்க எங்கே? ரூம் சார்த்தியிருக்கே?" என்றான். காத்திருந்த வாய்ப்பு வந்தவுடன், "ரூம் சார்த்தியிருக்கு என்று போய் முதலாளியிடம் சொல்லிவிடு" என்றார் அடுத்த சீட்காரர். பத்து நிமிடத்தில் விஜி வந்து அறைக் கதவைத் திறந்து சீட்டில் உட்கார்ந்து தெய்வீகப் புத்தகத்தைப் பிரித்தாள். ஒரு வரிதான் படித்தாள்.



உடனே பியூன் வந்து, "அம்மா, ஐயா கூப்பிடறாங்க" என்றான்.

"இதோ வந்துவிட்டேன்" என்று உடனே சென்றாள்.

"சாப்பிடவிடாமல் அழைத்துவிட்டேனா?" என்றார் முதலாளி சிரித்துக்கொண்டே.

"இல்லை சார்" என்றாள் விஜி.

இவளைக் கடுமையாகப் பேசாமல் இப்படி சிரித்துப் பேசுவது மானேஜருக்கு எரிச்சலூட்டியது.

தன் ஆத்திரத்தைக் காட்ட எண்ணி, "எங்கே போனீங்க? சார் அப்பவே வந்து காத்திருக்காங்க" என்றார்.

அவள் பதில் கூறும் முன்பே, முதலாளி, "எங்கே போவாங்க? சாப்பிடத்தான் போயிருப்பாங்க. இங்கே அவங்களுக்கு அரட்டை அடிக்க வேறு பெண்கூட இல்லையே" என்று கூறவே, மானேஜருக்கு சப்பென்றிருந்தது.

"விஜி, நீங்க ஏதோ எக்ஸாம் எழுத வேண்டும் என்றீர்களே, அது எப்போது?" என்றார்.

"அது ஏப்ரலில்தான் சார்" என்றாள்.

"அதற்கு லீவு வேண்டியிருக்குமோ?" என்றார் முதலாளி.

அதைப் பற்றி இவருக்கென்ன கரிசனம் என்று மானேஜருக்கு உள்ளூர ஆத்திரம்.

"இல்லை சார், நான் எக்ஸாமே எழுதப்போவதில்லை. வேலைக்கு வருவதால் என் குழந்தையைப் பெற்றோரிடம் விட்டு வைத்திருக்கிறேன். அவனை அழைத்து வரவேண்டும். அதனால் எக்ஸாம் எழுதுவது நிச்சயமில்லை. வேலையை விட்டுவிட வேண்டியிருக்கலாம்" என்றாள் விஜி.

முதலாளிக்கு ஏமாற்றமாயிருந்தது. மானேஜருக்குப் பரம சந்தோஷம்.

சிறிது யோசித்தார். "சரி, சரி. நீ போய் உன் வேலையைப் பாரம்மா" என்றனுப்பிவிட்டார்.

இதுதான் தருணமென்று மானேஜர், "போகட்டும் விடுங்கள் சார். பெண்கள் வேலைக்கு வந்தாலே நிறைய பிரச்சினைகள் வரும். ஏதோ வந்தோம், போனாம் என்பதற்குத்தான் அவர்கள் சரிப்படுவார்கள். எனக்குத் தெரிந்த கெட்டிக்காரப் பையன் ஒருவனிருக்கிறான். அழைத்து வரட்டுமா? உங்களுக்குப் பக்கபலமாக

இருப்பான்'' என்று அவருக்கு ஆதரவுபோல் பேசினாலும், மானேஜரின் எண்ணம் அவருக்குப் புரியாமலில்லை.

மனத்தையே மனிதன் என்று நாம் நம்புவதுபோல, ஆன்மாவே நம் தலைவன் என்பதை மறந்ததுபோல, முதலாளியை மறந்து, மானேஜரையே நிறுவனம் தலைவனாக நம்பும் பொய்மைக்கு அவர் இதுவரை இடம் கொடுத்துவிட்டது உண்மைதான். இனி அவர் விழித்துக் கொண்டுவிட்டார்.

''பரவாயில்லை பி.ஆர். (பரசுராம்). அதைப் பற்றிப் பிறகு பார்ப்போம்'' என்று புறப்பட்டுவிட்டார். காரில் ஏறி அமர்ந்தவர் விஜியை அழைத்து வரச் சொன்னார். விஜியும் வெளியே வந்து காரில் அமர்ந்திருக்கும் முதலாளியைப் பார்த்தாள்.

''விஜி, உன் கணவரை அழைத்துக் கொண்டு நாளை இரவு 7 மணிக்கு என்னை வந்து பார்'' என்று அட்ரஸ் கார்டை அவளிடம் கொடுத்தார்.

''சரி சார்'' என்றாள் பணிவாக. எல்லோரும் இவள் வெளியே சென்றதையும், உள்ளே வந்ததையும் பார்த்தனர். மானேஜர் அறையில் இருந்ததால் அவருக்கு எதுவுமே தெரியாது. எல்லோருக்கும் என்ன நடந்திருக்கும் என்று அறிய ஆவல். ஆனால் விஜி கலகலப்பான பெண்ணில்லை என்பதால் எல்லோர்க்கும் தயக்கம். மேலும் இப்போது அவளுக்கு முதலாளியின் கவனிப்பு வேறு இருப்பதால் எச்சரிக்கையா-யிருந்தனர்.

மாலை வீடு திரும்பியதும் விஜிக்கு வீட்டு நிலைமை நினைவுக்கு வர ஆரம்பித்தது. சில தினங்களாய் வாசன் வித்யாசமாய் நடந்து கொள்வது, காலையில் எதிர்வீட்டில் சாவியைக் கொடுத்தது எல்லாம் நினைவுக்கு வர, இந்நிலையில் நாளை இரவு தன் கணவனை அழைத்துக் கொண்டு வரச் சொல்லி முதலாளி கூறியதும் சேர்ந்து குழப்பம் ஏற்பட்டது. பிடிவாதமாய் அந்த எண்ணங்களைத் தவிர்த்து கதவைத் திறந்து உள்ளே போய், அவன் வந்து போனானா, சாப்பிட்டானா என்று பார்த்தாள். அவன் வந்திருக்கவில்லை எனத் தெரிந்தது.

உடனே எதிர்வீட்டில் போய் அவன் வந்து சாவி வாங்கிக் கொண்டானா என்று அறிய முற்பட்டாள். இவளைப் பார்த்தவுடன் எதிர்வீட்டு மாமி, ''உன் கணவர் வந்து பார்த்துவிட்டுப்



போயிருக்கிறார். நான் உள்ளே வேலையாய் இருந்ததால் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. பிறகு பக்கத்து வீட்டு அம்மா சொல்லித்தான் தெரிந்தது. சாரி விஜி'' என்று சாவியைக் கொடுத்து விட்டாள்.

வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கிறான். என்ன ஆகுமோ என்று பயம் எழுந்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

பாலைக் காய்ச்சி சிறிது பருகினால் களைப்புத் தீரும் என்றெண்ணி பாக்கெட்டைப் பிரித்து பாத்திரத்தில் ஊற்றி அடுப்பை ஏற்றினாள். பால் பொங்கி அடுப்பை நிறுத்தவும், ஹாலில் எதையோ பொத்தென்று போடும் ஓசை எழவும் சரியாயிருந்தது.

ஹாலுக்கு வந்தாள். வாசன்தான் தன் வரவை, கோபத்தை வெளிப்படுத்த ஒரு புத்தகத்தை டேபிள்மீது ஓசையெழ வைத்திருக்-கிறான்.

அந்தச் சூழலின் இறுக்கத்தை எப்படித் தளர்த்துவது? அவனை எதிர்த்துப் பேச அவளுக்குச் சந்தர்ப்பம் வந்ததேயில்லை. பணிவான மனைவியாகவே இருந்தாள். அவனே சில முறை அவளிடம், ''நீ இன்னும் சற்றுத் தைரியமாய் இருக்க வேண்டும். தைரியமாய்ப் பேச வேண்டும்'' என்று சொல்வான்.

மெல்ல திடப்படுத்திக் கொண்டு, ''காபி கொண்டு வரட்டுமா?'' என்றாள்.

''எதற்கு?'' என்றான் குத்தலாக.

இது என்ன கேள்வி? இதற்கு எப்படிப் பதில் சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. மௌனமாய் நின்றாள்.

''காலையிலிருந்து பூட்டிக்கொண்டு போனாயே, சாப்பிட்டேனா? இருக்கிறேனா? இறந்துவிட்டேனா? என்று நினைத்துப் பார்த்தாயா?'' என்றான் கடுமையாய்.

இது வீண் வம்பு என்று அவளுக்குப் புரிந்தது. அவள் புறப்படும் நேரம் வரை வெளியே சென்ற அவன் திரும்பி வராதது அவன் தவறல்லவா? அல்லது போகும்போது ஏதேனும் சொல்லிச் சென்றிருக்கலாம் அல்லவா? அவன் பிழை அவனுக்கே தெரிந்-திருக்கும். முன்பு ஒரு முறை இப்படித்தான் அவசரமாக வெளியே சென்றவன் வரத் தாமதமாகிவிட்டது. என்ன செய்வதென்றறியாது அலுவலகத்திற்கு லீவு சொல்லி அனுப்பிவிட்டு வாசலிலேயே

காத்திருந்தாள். அவசரமாய் வந்தவன் வருத்தப்பட்டான். ''இதற்காக ஏன் லீவு போட்டாய்? சாவியை அக்கம் பக்கத்தில் கொடுத்து சொல்லிவிட்டுப் போயிருக்கலாமே'' என்று தன் தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்டான். அவளோ, ''பரவாயில்லைங்க. ஏதோ போன இடத்தில் தாமதமாகிவிட்டது. நீங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று அவனைச் சமாதானப்படுத்தினாள். அப்பொழுதுதான் இரண்டு பேரும் தனித்தனி சாவி வைத்துக்கொள்ள ஏற்பாடாயிற்று. ஆனால் இன்று அவன் தன் சாவியை வைத்துவிட்டுப் போனான். அது யார் பிழை? அவள் ஒன்றும் பேசவில்லை.

''நீ உன் போக்கில் வீட்டைப் பூட்டிக்கொண்டு போனால் நான் வெளியே நிற்க வேண்டுமா?'' என்றான்.

''சாவியை எதிர்வீட்டில் கொடுத்துவிட்டுப் போயிருந்தேன்'' என்று மெல்லச் சொன்னாள்.

அவன் வேண்டுமென்றே சாவியெடுக்காமல் போய்விட்டு அவளை வம்பு செய்கிறான். ஆனால் நியாயமான காரணம்தான் புரியவில்லை.

''எதிர்வீட்டில் சாவியிருக்கும் என்று எனக்கெப்படித் தெரியும்? ஐந்து நிமிஷத்தில் உனக்கென்ன அவசரம்? வேலைக்குப் போகும் பெண் என்றால் இப்படித்தான் புருஷன் அவமானப்பட்டு, அனுசரித்துப் போக வேண்டும்'' என்று எரிச்சலாய்க் கூறினான்.

என்ன வேதனையிது. இந்த வேலையை அவனல்லவோ கட்டாயப்படுத்தி வாங்கிக் கொடுத்தான். அன்பும், பாசமும் உள்ள அவனா இப்படிப் பேசுகிறான்? இந்த நிலையிலும் அவளால் அவனை எதிர்த்துப் பேச முடியவில்லை. அவள் பயங்கொள்ளியல்லள். அவள் பக்கம் நியாயம் இருந்தும் அவன் அப்படிப் பேசுகிறானென்றால் அவனுக்குள் ஏதோ பிரச்சினை. சொல்ல முடியாமல் இப்படித் தவிக்கிறான். எனவே, எதிர்த்துப் பேசுவதோ, கோபப்படுவதோ சரியில்லை என அவள் உள்ளுணர்வு எச்சரித்தது.

''கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இந்த மாதத்துடன் வேலையை விட்டுவிடப் போகிறேன். குழந்தையையும் அழைத்து வந்து பள்ளிக்கூடம் சேர்க்க வேண்டும். வேலைக்குப் போனால் குழந்தையையும் கவனிக்க முடியாது. அதனால் நானே உங்களிடம் சொல்லலாம் என்றிருந்தேன்'' என்றாள் அடக்கமாக.



''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்'' என்று கூறியவர் தெய்வப் புலவரல்லவா?

எந்தச் சந்தர்ப்பத்திலும் அவள் பொறுமை இழந்தாளிலள் (இழக்கவில்லை).

அவளுடைய அன்பிற்கும், பணிவிற்கும் தான் காட்டிய கோபம் தேவைதானா? என்று உள்ளூர வெட்கமாயிருந்தது வாசனுக்கு. எழுந்து போய் குளித்துவிட்டு சாப்பிட வந்தான். காலையிலிருந்து அவன் சாப்பிடவில்லையே, பரிந்திரங்கி சாப்பாடு பரிமாறினாள். எதுவும் பேசாமல் அமைதியாய்ச் சாப்பிட்டான். அவன் மௌனம் அவள் முடிவை (வேலையை விட்டுவிடுவதை) ஏற்பது போலிருந்தது. புயலுக்குப் பின் அமைதி என்பார்களே, அது இதுதானோ? சில தினங்களாய் அவர்களுக்குள்ளே இருந்த பிணக்கு நீங்குவதன் அறிகுறி இது.

இருவரும் பேசிக்கொள்ளவில்லை. மறுநாள் எதுவும் நிகழாதது போல், ஆனால் (சில தினங்களாய் காரணமின்றி அவளைத் துன்புறுத்திய குற்றவுணர்வால்) இயல்பாக அவளுடன் ஒட்ட முடியாத நிலையில் பேசாதிருந்தான்.

அவள் வழக்கம்போல் வெந்நீர் எடுத்து வைத்து, டிபன் பரிமாறி, கைக்கு சாப்பாடு கலந்து கொடுத்து, தானும் புறப்பட்டாள்.

அவளை அழைத்துப் போக விருப்பம்தான். போலியாக அவசரமாய்ச் செல்வது போல் சாவியை அவள் எதிரில் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். எப்படியோ நேற்றுவரை இருந்த மேகமூட்டம் இன்று கலைந்துவிட்டது. அது போதும் என்று அலுவலகம் புறப்பட்டு விட்டாள். அப்போதுதான் இன்றிரவு ஏழு மணிக்குக் கணவரை அழைத்துக் கொண்டு வருமாறு பாஸ் கூறியது நினைவு வந்தது. நேற்றைய குழப்பத்தில் அதை அவனிடம் சொல்ல மறந்துவிட்டது. என்ன செய்ய? இன்று மாலை வந்ததும் வராததுமாய்ச் சொன்னால் எப்படி ஏற்பானோ? ஆனால் இது பெரிய இடத்து விஷயம். தான் வேலையை விடப் போவதாய்ச் சொன்ன பிறகும் வீட்டிற்கு அழைக்கிறார். அதுவும் கணவருடன். எதற்கு, என்னவென்று புரியவில்லை.

*தொடரும்....*

❀ ❀ ❀

*Volume 4, Page 367*

**அஜெண்டாவை எழுத அன்னை ஒரு பிரெஞ்சுக்காரரைத் தேர்ந்தெடுத்துள்ளார். அவருக்குச் சத் பிரேம் எனப் பெயரிட்டார். அவருக்கு ராமேஸ்வரத்தில் நீலகண்ட ஜோஷி என ஒரு குரு உண்டு. அவரிடம் கொஞ்ச நாள் போயிருப்பார். பொதுவாக சிஷ்யர் மாதிரி நடக்க மாட்டார். சுதந்திரமாக இருப்பார். சுதந்திரமாகப் பேசுவார். இந்தியர் போல் பஞ்சகச்சமும் அங்கவஸ்த்திரமும் உடுத்தியிருப்பார்.**

20 ஆண்டுகளாக அன்னை வாரத்தில் 2 நாள் அவரை 2 அல்லது 3 மணி சந்தித்துப் பேசுவார். அவர் பேசியவற்றை டேப் ரிகார்டில் எடுத்து வெளியிட்டது சத் பிரேம். முதலில் பிரெஞ்சிலும், மீண்டும் ஆங்கிலத்திலும் வெளிவந்தவை 13 வால்யூம்கள்.

அவர் பிறந்த நாள் அக்டோபர் 30.

அன்று அன்னை அவருக்காக எழுதிய செய்தி

***"நம் அழகிய கனவுகளெல்லாம் பலிக்கும் நாள் வரும்.***
***பலிக்கும் பொழுது நாம் கனவு கண்டதைவிட***
***அதிகபட்சம் சித்திக்கும்.***

***எங்கள் ஆசியுடன்"***

பொதுவாக அன்னை என் ஆசியுடன் என எழுதுவார்கள். "நான், எங்கள் என எழுதினேன்" என்றார். பகவானும் அன்னையும் இணைந்த ஆசி.

இதைப் பிரெஞ்சில் எழுதினேன். இது பகவான் ஸ்ரீ அரவிந்தரிடமிருந்து வருகிறது.

பகவான் அடித்துச் சொன்னார்.



***"இதை சத்பிரேமிடம் கூறு. அழகு நிறைந்தது, அற்புதமானது, கற்பனைக்கெட்டாதவை நாம் கனவு கண்டவை. அவை பலிக்கும்பொழுது பலிப்பது இவற்றையெல்லாம் அர்த்தமற்றவையாக்கும் என்பதை சத்பிரேமுக்கு வற்புறுத்திக் கூறு" என்றார் பகவான்.***

***அன்று உன் பிறந்த நாளன்று என்ன சொல்வது என நான் வியந்த பொழுது சூட்சுமத்தில் பகவான் "இதைக் கூறு" என்றார்.***

✧ **இது சத்பிரேமுக்கு மட்டும் பகவான் கூறியதில்லை.**

சூட்சுமமிருந்தால் நம் பிறந்த நாளன்று பகவான் பேசுவது, அன்னை கூறுவது இப்படியிருக்கும்.

ஆன்மீகம் தருவது உயிருள்ள சந்தனக் காடு.

நாம் பெறுவது கடையில் வாங்கும் சந்தனக் கட்டை.

அதை இழைத்து மஞ்சள் கலந்து உருண்டையாக விற்கிறார்கள்.

***அதிலும் சந்தன வாசனையுண்டு.***

✧ 2000 ஆண்டு முன்னிருந்த மனிதன் இன்று வந்து பார்த்தால் அவனுக்கு ஏற்படும் ஆச்சரியம் நாம் அன்னை அருளை அறியும்பொழுது ஏற்படும் ஆச்சரியத்தில் சிறு பகுதி.

✰ நாம் காண்பது ஜட உலகம்.

அது நடப்பது காரண லோகம்.

சூட்சும லோகம் வழி அது நமக்கு வருகிறது.

✰ மருமகளுக்கு மாமியார் மூலம் பரிசு தருவது போன்றது எனலாம்.

சூரியனை நாம் பார்த்தால் வெளிச்சமாக இருக்கிறது.

நாம் எதைக் கண்டோம், என்ன அளவில் கண்டோம் என நாமறிவதில்லை.

அதன் நிலை பெரியது. நாம் காண்பது சிறியது.

குருடன் கொக்கைப் புரிந்து கொண்டது போலும்

குருடர்கள் யானையைத் தொட்டு அறிவது போலும்

***நம் பார்வை ஊனம்.***

***ஊனக்கண்ணிற்குப் பார்வையில்லை.***

நம் பிறந்த தினத்தன்று மேற்கூறிய செய்தியை நமக்காகக் கூறியதாக நினைத்துப் படிக்க வேண்டும். இன்று அப்படிப் படித்தால் இன்றே பிறந்த தினமாகும்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

செல்வாக்கால் உயர்ந்தவர் தாழ்ந்த நிலையிலுள்ளவரிட-மிருந்து ஆன்மீகப் பலன், விவேகம் பெறும் நிலையில் இருப்பார்கள். சமூகத்தில் தங்களுக்குத் தேவையான உதவியையும் அவர்களிடமிருந்து பெறும் நேரமுண்டு. பொருளாகவும் அவ்வுதவியை நாடும் நிலையும் ஏற்படும். இந்நிலைகள், உயர்ந்தவனை, தாழ்ந்தவனைவிடத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு செல்கிறது என்ற உண்மையை அறிந்து ஏற்றுக்கொள்வது உண்மையான அடக்கம்.

***வாழ்வில் உயர்ந்தவன்***

***ஆன்மாவில் உயர்ந்தவனைவிடத் தாழ்ந்தவன்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: N. Asokan

# மரபும் மாற்றமும் - தவமும், பூரண யோகமும்

மோட்சத்தை நாடும் தவம், பூரணத்தை நாடும் யோகத்தினின்று மாறுபட்டது. மாறுபடும் இடங்களை வரிசைப்படுத்தலாம்.

| வ. எண். | மரபு செய்யும் தவம் | பகவான் நாடும் பூரணயோகம் |
|---|---|---|
| 1. | வாழ்வை விலக்கி, தவத்தை மேற்கொள்ள வேண்டும். | வாழ்வை ஏற்று, தெய்வீக வாழ்வாக மாற்ற வேண்டும். |
| 2. | உலகை மனம் சிருஷ்டித்தது. | உலகைச் சிருஷ்டித்தது சத்தியஜீவியம். |
| 3. | தவம் மேல்மனம் கண்ட இலட்சியம். | யோகம் அடிமனம் பெற்ற பூரணம். |
| 4. | அகந்தை அழியாமல் மோட்சம் பெறலாம். | அகந்தை அழிந்த பின்னரே யோகம் ஆரம்பாகும். |
| 5. | பிரம்மம் என்பது அக்ஷரப் பிரம்மம். | அக்ஷரப் பிரம்முமும், க்ஷரப் பிரம்மமும் சேர்ந்த முழுமை பிரம்மம். |
| 6. | பிரகிருதி என்பது ஜடமான சக்தி. | பிரகிருதி பிரம்ம சக்தி, உணர்வுடையது, ஜடமானதல்ல. |
| 7. | ஆனந்தம் சொர்க்கத்திற்குரியது. | ஆனந்தம் பெருகி நிலையாக உலகில் அனுபவிக்க வல்லது. |
| 8. | வாழ்வு கர்மத்திற்குக் கட்டுப்பட்டது. | கர்மம் தெய்வீக வாழ்வைக் கட்டுப்படுத்தாது. |
| 9. | தீமையும் இருளும் தீர்க்கமாக உண்டு. | உலகில் இருள், தீமை படைக்கப்படவில்லை. |
| 10. | பிரம்மம், புருஷன், ஈஸ்வரன் தனிப்பட்டவை. | மூன்றும் ஒன்றே. |
| 11. | காலம் தவிர்க்க முடியாதது. | மூன்றாம் நிலைக் காலம் க்ஷணத்தில் பலிப்பது. |
| 12. | தவத்தால் இறைவனையடையலாம். | யோகம் மனிதனை இறைவனாக்கும். |

தொடர்ச்சி பின்பக்க அட்டையில்.....

முன்பக்க அட்டையின் தொடர்ச்சி.....

மரபும் மாற்றமும் - தவமும், பூரண யோகமும்

| வ. எண். | மரபு செய்யும் தவம் | பகவான் நாடும் பூரணயோகம் |
|---|---|---|
| 13. | தவத்தைச் செய்வது அக்னி. | யோகம் இறைவனுக்குரியது. |
| 14. | புனர்ஜென்மத்தால் தவம் பூர்த்தியாகும். | புனர்ஜென்மம் தேவையில்லை. |
| 15. | மனிதன் பரமாத்மாவை அடைவது மோட்சம். | பரமாத்மாவும் பாதாளமும் இணைவது திருவுருமாற்றம். |
| 16. | ஆத்மா சாட்சி புருஷன். | ஆத்மாவுக்குப் பிரபஞ்ச அம்சமும் பிரம்ம அம்சமும் உண்டு. |
| 17. | முரண்பாட்டை ஏற்கிறோம். | முரண்பாட்டை உடன்பாடாகக் கருதுகிறோம். |
| 18. | ஆண்டவன் உலகைச் சிருஷ்டித்தார். | ஆண்டவன் தாமே உலகமானார். |
| 19. | சிருஷ்டித்த இறைவனை அறிவோம். | பரிணாமத்தால் உயரும் இறைவனை அறிய வேண்டும். |
| 20. | சிருஷ்டி எப்படி என அறியோம். | சிருஷ்டியை நம்மால் விளக்க முடியும். |
| 21. | ஜடம் சச்சிதானந்தம் என்பது ஞானம். | பிரபஞ்சத்தில் ஜடத்தை சச்சிதானந்தமாக அனுபவிக்கலாம். |
| 22. | இறைவனை அறிவது ஞானம். | எதை எப்படிச் செய்வது என்பது ஞானம். |
| 23. | யார் நிர்ணயிப்பது எனத் தெரியாது. | நிர்ணயிப்பது பிரம்மம். |
| 24. | அக்ஷரப் பிரம்மத்தை அடைய முடியும். | நாமே பூரண பிரம்மமாக உலகில் மாறலாம். |
| 25. | உலகில் விரயம் தவிர்க்க முடியாதது. | சிருஷ்டியில் விரயமில்லை. |
| 26. | மரணமிலா வாழ்வு ஆத்மாவுக்குண்டு. | உடலுக்கு மரணமில்லை. |
| 27. | வாழ்வு பொல்லாதது. | வாழ்வு ஆன்மீக வளத்தை உற்பத்தி செய்யும் லோகம். |

October 2010 Jiviyam 16 Malar 6
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11


புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| **அன்னையின் ஆன்மீகப்பரிசு** | ரூ.100/- |
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்** | ரூ.100/- |

*தமிழாக்கம்:* என். அசோகன்

| | |
|---|---|
| **SATYA JYOTHI** | ரூ.200/- |

**(CONCISE TRUISMS)**
**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191